
A-T-R- உ 31
2.3.93

சிவமயம்

அளவெட்டி

## கும்பழாவளை விநாயகர்

# தோத்திரத்திரட்டு



— வெளியீடு —

அளவெட்டி கும்பழாவளைத் தொண்டர் சபை

துந்துபி ௵ வைகாசி மீ 1982

1988. 10. 21.

உ

சிவமயம்

# அளவெட்டி

## கும்பழாவளை விநாயகர்

# தோத்திரத்திரட்டு



— வெளியீடு —

அளவெட்டி கும்பழாவளைத் தொண்டர் சபை

துந்துபி ௵ வைகாசி ௴ 1982

விலை ரூபா: 8-00

உ

# மதிப்புரை

அளவெட்டி வாசியான திரு. க. வே. கந்தையாபிள்ளை அவர்களால் கும்பழாவளை விநாயகர் பிரபந்தத்திரட்டு என்னும் பெயரில் வெளியிடப்பட்ட இந்நூலைச் சில திருத்தங்களுடன் கும்பழாவளைத் தொண்டர்சபை வெளியிடுகின்றது. திரு. இ. வேதாரணியரின் மூதாதை ஒருவரால் பாடப்பட்ட விநாயகர் தோத்திரமாலை எம்மால் போற்றிப் பாராயணம் செய்யவேண்டியதொன்றாகும். பக்திச் சுவை சொட்டச்சொட்ட, மனம் நெக்கு நெக்கு உருகித் தன்னை எம்பெருமானுக்கு அடிமையாக்கி, பெருமானை வேண்டிப்பாடும் செய்யுள்கள் எம்மனத்தை உருக்கும் மணிவாக்குகள் ஆகும்

திரு. த சபாபதிப்பிள்ளை அவர்களால் பாடப்பட்ட ஊஞ்சற் பாக்கள் வேதாகமக் கருத்துக்களை சொல்நயம் பொருள்நயம் பெற எடுத்தியம்புகின்றன. இவ்வரிய செய்யுள்கள் அடங்கிய நூலைப் பேணிப்பாதுகாத்தற் பொருட்டும் அன்பர்கள் ஓதிப் பயன்பெறும் பொருட்டும் அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயத் தொண்டர் சபை முன்வந்து இதனை வெளியிடுவது பாராட்டுக்குரிய தொன்றாகும். இந்நூலை ஓதிப் பயன் பெறுவீர்களாக.

பத்திதரும் சித்திதரும் பாசவினை யகற்றும்
முத்திதரும் மோன சுகமளிக்கும் - மெத்துபுகழ்
கும்பழா வளைப்பதியிற் கோயில்கொள் குஞ்சரத்தை
நம்பியே கைதொழுதக் கால்.

இங்ஙனம்

செ. மயில்வாகனம்

தலைவர்,

தர்மகர்த்தாக்கள் சபை.

உ

# முகவுரை

இந்நூல் அளவையம்பதி ஆயுர்வேத வைத்தியர் திரு. க. வே. கந்தையாபிள்ளை அவர்களால் ஸ்ரீமுக ஆண்டு ஆவணி மாதம் (1933ம் ஆண்டு) வெளியிடப்பட்டது இதன் பிரதிகள் அருகிப்போனமையால், வருங்காலச் சந்ததியினரும் இவ்வருட்பாக் களை ஓதிப் பயன் பெறுமாறு பல அன்பர்களது வேண்டுகோட் படி, அளவெட்டி கும்பழாவளைத் தொண்டர் சபை இந்நூலைச் சில திருத்தங்களுடன் வெளியிடுகின்றது. அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களால் விநாயகப் பெருமான் மீது பாடப் பெற்ற திருப்பள்ளியெழுச்சியும், அருட்பாடல்கள் சிலவும் இடம் பெறுகின்றன. இந்நூலை ஓதிப்பயன் பெறுவீர்களாக. இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய ஸ்ரீமகள் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றி

தொண்டர் சபை

உ

சிவமயம்

# தலமகிமையும் நூல் வரலாறும்

(இஃது அளவெட்டி வாசியான திரு. க. வே. கந்தையாபிள்ளை அவர்களால் ஸ்ரீமுக ஆண்டு ஆவணி மாதம், வெளியிடப்பட்ட பொழுது திரு. த. சபாபதிப்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டது)

ஈழமண்டலத்தின் வடபாகமாயுள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த அளவைமாநகர மத்திய ஸ்தலமாயுள்ள கும்பழாவளைப் பதியில் எழுந்தருளியிருக்கும் விக்கினேஸ்வர ஆலய வரலாற்றை மெய்யடியாரின் பத்தி வளர்ச்சியின் பொருட்டுக் காலங் கண்ட முதியோர் வாய்க் கேட்டறிந்தபடி வெளியிடுதலின்றியமையாமையாயிற்று.

பூர்வீகத்திலே மாருதப்புரவீகவல்லி யென்னும் பெயரிய சோழவரசிளங் கன்னிகை குதிரைமுக முடையளாய்க் குஷ்டரோக வாய்ப்பட்டமையால் அக்குதிரை முகமுங் குஷ்டரோகமும் நீங்குதற்குப் பற்பல சிகிச்சைகளுந் தெய்வ வழிபாடுகளு மாற்றியும் தீராமை கண்டு தவசிரேஷ்ட ரொருவரின் வாக்குப் பிரசாதப்படி இவ்வியாழ்ப்பாணத்தின் வடகரையிலுள்ள கீரிமலையென்னுந் திவ்விய தீர்த்தத்திற் கந்தசுவாமியுபாசனையுடன் ஸ்நானஞ் செய்து ஓரே நிரையில் மாவிட்டபுரம் முதலாகத் தென்றிசை நோக்கி ஐந்து கோவிலிலே கந்தசுவாமி விக்கிரக ஸ்தாபனாராதனை செய்து தனது நோயுங் குதிரை முகமும் நீங்கப்பெற்றும் ஊறித்த குதிரைமுகம் பிறர் பார்வைக்கு நீங்கியதாயிற்றன்றித் தன் சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப் பெறுதாக இதன் காரணம் யாதென்றுய்ந்த விடத்துக் கந்தசுவாமி வழிபாட்டுக்கு முன் விக்கினேஸ்வர ஆராதனை செய்யாமையெனத் தவப்பெரியோர் கூறக் கேட்ட இராஜ குமாரத்தி தன் பிழைக்கு மனம் நொந்து விக்கினேஸ்வரரைத் தியானித்து "மெய்யடியாரின் மெய்யன்பையேற்று

மெய்யருள் பாலிக்கும் மெய்ப்பொருளாயுள்ள பெருமானே, அறி யாமையாற் செய்த என்பிழையை மன்னித்து என்மேலிரங்கியரு ளுக. யான் செய்த பிழைக்குப் பிராயச் சித்தமாக உமது பிரதி ரூபத்தை ஏழுஸ்தானங்களிற் பிரதிட்டை செய்து வழிபடாற்று வேன்'' என்று வாக்குறுதி பண்ணிக் கொல்லங்கலட்டி முதலா கத் தென்றிசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக் கினேஸ்வரப் பிரதிட்டை செய்வித்தாள் அத்தலங்களாவன: கொல் லங்கலட்டி, வறுத்தலை, அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக் கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவாகும். இவைகளுள் மத்திய ஸ்தலமாயுள்ள கும்பழாவளையில் விக்கினேஸ்வரரார்ச்சனை முடியவே குமாரத்தியின் குதிரை முகச்சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாய் நீங்கியதாயிற்று. இத்திவ்விய சரித்திர வுண்மை இக்கும்பழாவளையின் முன்றிற் சோலைக்கு மாவிழிதிட்டி (மா+இழி+திட்டி) எனவும், இத்தலத்தின் தென்கிழக்கு மூலையி லிருக்கிற வயல் (இது முன் குளமாயிருந்தது) ''குமாரத்தி குளம்'' எனவும், குதிரை முகம் நீங்கியபின் ஸ்தாபித்த இதனடுத்த தென் தலத்துக்குப் ''பெருமாக்கடவை'' எனவும் பெயர்களுண்மையாற் றெள்ளிதிற் றெளியப் படலாகும்.

இவ்வரசிளங் கன்னிகைக்கு அநுக்கிரகித்தது மாத்திர மன்றி இத்திருக் கும்பழாவளை விக்கினேஸ்வரப் பெருமான் மெய் யடியார்க்கருள் பொழிந்து செய்த அற்புதத் திருக்கூத்துக்கள் எத்தனையோவுள. அவைகளை யொன்றொன்றாய் விரித்தல் முடிவுறா தென்றஞ்சி விடுத்தனம். நிற்க, இப்பெருமானிடத்தில் தம்முடல் பொருளாவி மூன்றையும் உண்மையில் ஒப்பித்த பெரியாரொரு வராற் கட்டளைக் கலித்துறை ரூபமாக வியற்றப் பெற்ற தோத் திரமாலை வரையப்பட்டவோர் பழந்திரு முறையை அளவெட்டி க. வே. கந்தையாபிள்ளை ஆயுள்வேத வைத்தியர் அடியேனிடந் தந்து அதை அச்சிட்டு வெளிவிடுதற்கேற்ற முறையில் எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டதால் அடியேன் அம்முறைச் செய் யுட்களொவ் வொன்றையும் வாசிக்க வாசிக்க அவற்றை இயற்றிய தவப் பெரியாரின் விக்கினேஸ்வர பத்தி தாளுகவே முற்றிப் பழுத்து வெளிப்படக் கண்டேன். அவரது நாமம் வெளிப்படக் காணுதிருப் பினும் மூதியோர் வாய்க்கேட்டறிந்தபடி இவர் அளவெட்டி வடக் கிலிருந்து சில வருடங்களின் முன் சிவபதமடைந்த மகானுபமர் இராமர் வேதாணியர் என்னும் விக்கினேஸ்வர தாசரின் மூதாதை யரெனத் தெரிய வருகிறது. அவர் யாராயிருப்பினும், அவரது நாமந் தெரியப்படாவிடினும், அவரது பத்திரசம் முற்றிப்பழுத்த செய்யுட்களை அடியேனும் பார்வையிட்டு அச்சிலேற வைக்கும்

புண்ணியத்திற் பங்குபற்றும்படி அடியேனையுங் குறித்த வைத்தியர் மூலம் ஆளாக்கிய எம்பெருமானருட் பொழிவை மனதிலூன்ற வைத்து இச் செய்யுட்களை அடியேன் பார்வையிட்ட போது சிதைந்தொழிந்த ஒன்பது செய்யுட்களுக்கும் பதங்களுக்கும் பதிலுதவியுள்ளேனெனினும், ஆக்கியோனின் பத்திரசம் பழுத்த சில சொற்கள் அவை யெவ்வகையாயிருப்பினும் அவ்வகையாயிருக்க வைத்துப் பார்வையிட்டதன்றி அப்பெரியார் தம்மன்பை வெளிப்படுத்தியமைத்த சொற்களை அமைத்தபடி விடுத்து என் சிற்றறிவுக்கேற்றபடி செய்த இந்நூற் பார்வை முற்றுஞ்சரியென்று ஒப்புக் கொள்ளேனுதலின், இத்தோத்திரமாலையிலுள்ள பத்திரசத்தையே பொருளாகக் கொண்டு அடியேனிற் பிழைபாராட்டாது உலகம் மன்னிக்குமென்பது எனது நம்பிக்கை.

**த. சபாபதிப்பிள்ளை**
பிரசித்த நொத்தாரிஸ்

உ

## பிரபந்தங்கள் இயற்றியவர்களின்

# நாமதேயங்களின் அட்டவணை

அளவெட்டி ஸ்ரீ விநாயகப் பெருமான் திருப்பள்ளியெழுச்சி

*அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களால் பாடப்பெற்றது*

கும்பழாவளை விநாயகர் தோத்திரமாலை

*ஸ்ரீ விநாயக தொண்டன் இ. வேதாரணியரின் மூதாதை அவர்களால் பாடப்பெற்றது*

கும்பழாவளைப் பதிகம்

*ஸ்ரீ அ. பரநிருபசிங்கம் அவர்களால் பாடப்பெற்றது*

கும்பழாவளை இரட்டைமணி மாலை

*ஸ்ரீ ச. பரமசாமிஐயர் அவர்களால் பாடப்பெற்றது*

கும்பழாவளை விநாயகர் கலிவெண்பா

*ஸ்ரீ வைத்திய சிகாமணி அ. கதிரித்தம்பி அவர்களால் பாடப்பெற்றது*

கும்பழாவளை விநாயகர் சதகம்

கும்பழாவளை விநாயகர் ஊஞ்சல்

*ஸ்ரீ த. சபாபதிப்பிள்ளை அவர்களால் பாடப்பெற்றது*


ஸ்ரீ கும்பழாவளை விநாயகர் போற்றித் திருப்பதிகம்

ஸ்ரீ கும்பழாவளைப் பிள்ளையார் தோத்திரம்

*அருட்கவி சீ விநாசித்தம்பி அவர்களால் பாடப்பெற்றது*

கும்பழாவளை ஸ்ரீ சுப்பிரமணியர் திருஊஞ்சல்

*ஸ்ரீ த. சபாபதிப்பிள்ளை அவர்களால் பாடப்பெற்றது*



உ

சிவமயம்



## அளவெட்டி - கும்பழாவளை

# ஸ்ரீ விநாயகப் பெருமான்

# திருப்பள்ளியெழுச்சி

போற்றியெம் மாதவம் பூத்தமெய்ப் பொருளே
புகன்றிடு நான்மறை வழுத்திடு முதல்வா
சாற்றிடு செங்கதிர்த் தபனனு மெழுந்தான்
தாரகை மழுங்கின தண்ணடி தொழுவார்
ஏற்றிய சிந்தனை யூற்றெழுந் தணைந்தார்
எழில்மிகு கும்பழா வளைக்கண பதியே
ஆற்றிடு நின்னரு ணிதியுல குவப்ப
ஐங்கர னேபள்ளி யெழுந்தரு ளாயே. 1

கண்ணகல் ஞாலங் கவலைக ளொழிந்திட
கதியொரு நான்கின் திறநலம் தெளிந்திட
விண்ணவர்க் கரிதாம் வேதநூல் வரைந்திட
வெண்மருப் பொன்றினைக் கைத்தலம் ஏந்திய
புண்ணியப் பரவை பொழிமதக் களிறே
பூதலக் கும்பழா வளைக்கண பதியே
எண்ணுதற் கரியாய் இறைஞ்சினர்க் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 2

நாதமும் விந்துவும் கலைகளும் கலைசேர்
ஞாயிறும் மதியமும் தேயுவும் பயின்ற
பூதமும் புவனங்க ளனைத்தும் சராசரப்
பொலிவும் படைத்திடும் பூரணி மகனே
வேதமும் ஆகம விளைவும் செழித்து
விளங்கிடும் கும்பழா வளைக்கண பதியே
ஆதவ ளுகியெம் அகத்தினில் நிறைந்த
அருளழ காபள்ளி யெழுந்தரு ளாயே. 3

வீணையும் குழலும் விண்முக டெழுந்தன
மிருதுடி முழவம் மத்தள முழங்கின
மாணுறு வானவர் மறைநான் கோதினர்
வளர்பண் ணிசைமுறை வழுத்தினர் அடியார்
சேணுயர் கோபுரம் வாவிகண் மலரும்
சீருறு கும்பழா வளைக்கண பதியே
காணரும் வண்ணக் கருவுருப் பிரணவக்
கஜவத னுபள்ளி எழுந்தரு ளாயே. 4

பொன்புரை மேனியும் முடித்தசெஞ் சடையும்
புனைதரு மகுடமும் பாசாங் குசமும்
முன்றுதிக் கரமும் முந்நூல் மார்பும்
முக்கண் மிளிரும் இலட்சண முகமும்
இன்புறக் காட்டி எமைக்காப் பவனே
இதந்தரு கும்பழா வளைக்கண பதியே
அன்பினில் விளைந்த ஆனந்த மலையே
ஆரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே. 5

இருவினை இருளால் இடருழன் றேக்குறும்
எண்ணரும் பிறவித் தளையறுத் தடியார்
குருநெறி பிடித்துக் குணமலை யேறிக்
குளிர்ந்தமா மனையிற் குடிபுகச் செய்யும்
திருமகள் மருகா சிவன்தேர் இறுத்த
சேயே கும்பழா வளைக்கண பதியே
மருவினின் றகலா மனமணி விளக்கே
மகேஸ்வர னேபள்ளி யெழுந்தரு ளாயே. 6

மாவையூர் முருகனின் வரம்பெறு வனிதையாம்
மாருத வல்லியின் மாமுக நோய்தனை
மாவிழி திட்டிமுன் வந்துநின் றகற்றி

மாலுமை சிவன்குகன் வைரவர் சூழ்தர
ஓவியக் கோயிலில் காவியக் கருவாய்
உறைந்திடுங் கும்பழா வளைக்கண பதியே
தேவிவல் லபைக்கொரு நாயக னாகிய
சிற்பர னேபள்ளி யெழுந்தரு ளாயே. 7

தென்னையிற் பைங்காய் செங்காயாகச்
செய்துநின் பூசகர் மனங்குளிர் வித்தனை
மன்னிய மயில்வா கனதொடு கருத்து
மருவுபல் தொண்டரும் பணிசெய நயந்து
பொன்னெடுங் கோபுரக் கோயிலினமர்ந்த
பூம்பொழிற் கும்பழா வளைக்கண பதியே
அன்னையு மப்பனும் அழைத்தவி நாயக
அதிபதி யேபள்ளி யெழுந்தருளாயே 8

பத்தியிற் பெருகிய முக்கனிச் சுவையே
பரவெளி கடந்த பருதியே மேலாம்
முத்தியின் வித்தே மூலா தரனே
மூஷிக வாகன முறையிடு மடியவர்
புத்தியி லுறைதரு புனிதா நமக்கருள்
புரிந்திடும் கும்பழா வளைக்கண பதியே
நித்திய முனையே நினைந்தழைக் கின்றோம்
நிருமலனே பள்ளி யெழுந்தரு ளாயே. 9

செல்வக் கணேசனே நின்வழித் தொண்டரின்
சென்மக் கணக்கழித் தெழுதுவை யதனல்
சொல்வளர் பிரமனும் கூற்றனும் கோள்களும்
தொழுதுநின் வரவெதிர் பார்த்துநிற் கின்றனர்
வல்வினை யனுகா மலரடிக் கீர்க்கும்
வரதனே கும்பழா வளைக்கண பதியே
கல்வியும் நிதியமும் நிறைவும் சுரக்கும்
கற்பகமே பள்ளி யெழுந்தரு ளாயே. 10

ஐந்தெழுத் துடனே அணிநீ றிலங்க
நந்தியின் மணியும் சுருதியும் துலங்க
தந்திரச் சைவ வரன்முறை ஓங்க
சந்ததம் மாரியால் தருவளம் தேங்க
சிந்தனைத் திருமுறைச் சிவமணம் கமழும்
மந்திரக் கும்பழா வளைக்கண பதியே
செந்தமிழ் சிறக்கத் திருவருள் சொரியும்
சுந்தரனே பள்ளி யெழுந்தரு ளாயே. 11

உ
சிவமயம்

# கும்பழாவளை
# விநாயகர் தோத்திர மாலை

## காப்பு

பூமாது வாழ் கும்பழாவளை மேவிய புங்கவநின்
பாமேவு தோத்திர மாலைக் கலித்துறை பாடியுய்யக்
கோமானு தற்கட் பெருமானிடப்புறங் கொண்டுவைகும்
மாமாரி தந்த மதகரிமாமுக வந்தருளே.

## நூல்

1 அந்திப் பிறை யணிந்தோனருளால் வந்தவதரித்த
தொந்திப் பெருவயிற்றைந்துகரா வுன்னைத் தோத்தரித்தேன்
கந்தொத்த தோளுடைக் காலன் வருகையிற் காவுமையா
நந்துற்ற சோலை செறி கும்பழாவளை நாயகமே.

2 ஆராத நின்மலர்ப் பாதார விந்த மடைந்தெனது
தீராத பாவச் செனனத் தொடர்வினை தீர்க்க வெண்ணிப்
பேராமலுன்பதம் பேணிப் பணியப் பெறுகிற்றிலேன்
நேராக வந்தருள்தா கும்பழாவளை நிர்மலனே.

3 பாவச் செனனப் பரவையிற் சேரும் பழவினையின்
சோபத்தை நீக்கித் துணைசெய்ய வாவென்றுயரகற்றி
தீபச் செழுஞ்சுடர் போலெங்கு மேவிய தேசிகனே
ஆபத்தை நீக்கி யருள் கும்பழாவளை யைங்கரனே.

4 பண்டே புரிந்த பழவினையின் றொடர் பற்றறுக்க
வுண்டோ மருந்தினியுன்னை யல்லாலங்குமை சினத்தால்
விண்டே பெறுகின்ற சாபத்தை நீக்கிய மெய்ப்பொருளே
தண்டேன் றுளி கும்பழாவளை மேவிய தற்பரனே.

5 பாகுற்ற மென்மொழிப் பாவையராசைப் படுவலையின்
சோகத்தை நீக்கத்துணை செய்குவாய்துயர் தொட்டலைந்த
நாகத்த லைவன் படுந்துயர் மாற்றிய நாயகமே
வாகுற்ற சோலை செறிகும்பழாவளை வாரணமே.

6 பாடப்படிக்க வறியாத புல்லன் பரிந்துன்பதங்
தேடக்கிருபை யெனக்கருள் வாயிச் செகமுய்யநீ
யோடிக் குறுமுனிகையிற் கமண்டலத் துற்றனையால்
நாடிக்கருணைதரு கும்பழாவளை நாயகமே.

7 கல்லாத புல்லன் கசடனுன்பாத கமலந்தனிற்
செல்லாம லென்மனந் தேடாமல் வீணிற்றிரிந்தலைந்தேன்
அல்லார் தருங்குழலம்மை மைந்தா வென்னையாண்டருள்வாய்
வல்லார்பணி கும்பழாவளை வாழருள் வாரிதியே.

8 நீரார்ந்த செஞ்சடை நெற்றியங்கண்ணனை நின்னன்னையாம்
வாரார்ந்த கொங்கையுமையாளுடன் வலம் வந்துமுந்தி
ஏரார்ந்த மாங்கனி வாங்குமுன்பாத மெனக்கருள்வாய்
காரார்ந்த சோலை செறிகும்பழாவளைக் கற்பகமே

9 கண்டேனுனது கருணைச் சமுத்திரங் கண்டதற்பின்
விண்டேன் பிறரை வெறுத்தேனெனது வினையகற்றிக்
கொண்டேனுன்னை நந்த வாரியுட்டோய்ந்து குதுகலித்தேன்
வண்டேர் மலர்ப் பொழில்சேர் கும்பழாவளை வானவனே.

10 வானவனே யரன் மாமகனே நம்பும் வண்மையர்க்குத்
தானருள்சேர்தந்தி மாமுகனே யன்புதன் வடிவாங்
கோனவனே குருவானவனே குனிகுண்டிகையி
லானவனே யெனையாள் கும்பழாவளை யற்புதனே.

11 அற்புத மாயுன்னருள் பிடித்தேறுமடியருக்கு
நற்குணமேவிய நாயகமா யென்று நல்லுணர்வோர்
சொற்குணமாகிய சோதியெனக்குத்துணை செய்குவாய்
தற்பரனே கும்பழாவளை மேவுந் தயாபரனே.

12 ஆநந்தமாகி யறிவுக்கெட்டாத வரும் பொருளாய்த்
தானின்றுலாவி யருளே புரிகின்ற தற்பரனே
நானென்ற காலன் வரும்பொழுதென் முன்னயந்தருள்தா
தேனின்ற சோலை செறிகும்பழாவளைத் தேசிகனே.

13 வானவனே யுன்மலர்ப்பதம் தேடும் வழியறியா
வீன முளே னருள் தந்தெனையாள் தமியேற்கிரங்கி
யூனமிலா விதிகாசந் தழைக்கக் கொம் பொன்றொடித்தாய்
தேன் மலர்வாவிசெறி கும்பழாவளைத் தேசிகனே.

14 உன்னைத்துணையென யானடைந் தேனையவுன்னையன்றிப்
பின்னைத்துணை தமியேற் கிவனுர் நஞ்சுபில்கரவிற்
றன்னிச்சையாய் நடித்தோன் மருகா வெனைத்தாபரிப்பாய்
வன்னத்துடவை செறிகும்பழாவளை வானவனே.

15 அருளே யருளினுருவே யுருவுமருவு மெனும்
பொருளே யெவர்க்கும் பொது மருந்தாகுமென் புண்ணியனே
தெருளே படைந்திங்குயரும் படிக்குன்றிருப்பதத்தி
னருளே யெனக்கருள்வாய் கும்பழாவளை யைங்கரனே.

16 பூரணமாகி யுலகிலுள்ளோர்கள் செய்புண்ணியமாய்க்
காரணமாகிக் கடகரியாய் வந்த கண்ணுதலே
நாரணனுர்மருகா வென்னையீங்கு நயந்தளிப்பாய்
தோரணமேவு மதிற்கும்பழாவளைத் தொல்பரனே.

17 வாட்டம் பொருந்தி மதியிலியாகி நல்வழியதனைத்
தேட்டம் பெறுமற்றிரிந்தலைந் தேனென்றுந் தேற்றுகில்லேன்
ஈட்டம் பொருந்துன்னிருபத மென்சிரத் தேறவைத்துக்
காட்டுங்கருணை தந்தாள் கும்பழாவளைக் கற்பகமே

18 பஞ்சப்புலன் செயுஞ் சூட்சியிலாழ்ந்து பரந்துமனங்
கொஞ்சக் கெறுவங்கள் காட்டியதோஷிக் கொடியனுய்யத்
தஞ்சத்தை நீதந்து தாபரித் தாள்தயவாய் நிதமும்
மஞ்சுற்ற சோலை செறிகும்பழாவளை வானவனே.

19 பாரப் பவிஷுபணம்பெறு புத்திர பாக்கியமும்
வீரத்தனங்களும் வென்றிடுமோ மிகவீறு கொண்டு
காரொத்த காலன் வரும் பொழுதுன் றன் கருணையல்லால்
நீரொத்த வாவி செறிகும்பழாவளை நிர்மலனே.

20 பன்னட்செறிந்த கிரக வெங்கோபம் பழவினைக
ளின்னுட் பொருந்திய தெய்வத் துரோக மிராசவினை
உன்னுற் பறந்திட வின்னருள் தந்திங்குதவி செய்வாய்
பொன்னுற்றுடைவை செறிகும்பழாவளைப் பூரணனே.

21 பற்றித்துரந்து நின்சந்நிதிவாசல் பயின்று நிதங்
தெற்றும் பவக்கடல் நீந்தறி யாமற்றினைத் தலைந்து
நிற்கின்ற பாவங் கடந்துய்ய வேண்டி நினையடைந்தேன்
கொற்றக் குறத்திக் கருள் கும்பழாவளைக் குஞ்சரமே.

22 பாலுக்குள் நெய்வரும்பான்மை யொப்பாகவுன் பாதமலர்ச்
சீலக்கிருபை தருதியென் பாவந் திரிந்தழிய
ஓலக்கடலிற் பணியணை மீதிலுறங்குமந்த
மாலுக்குச் சாபந்தவிர் கும்பழாவளை மாமணியே.

23 பொய் வெங்கொலை குருநிந்தனையாதி பொருந்து குற்றஞ்
செய்யும் பவங்கள் துரந்து வந்தொன்றித் திரளுமுன்னம்
உய்யென்றுனது கிருபை யினுலென்னை!யோங்க வைப்பாய்
வய்யம் புகழ்கும் பழாவளை மேவும் மதகளிறே.

24 செய்யவ ளேடிச் செலப்பரதே சந்திகைத்துமையாள்
துய்யவுன் பாதத் துணைமலர் வேண்டித் துதித்து நிற்பக்
கையுற வேலர் வரவேயருள் செய்த காரணனே
யைய வெனக் கருள்தா கும்பழாவளை யைங்கரனே.

25 மாசற்ற வுன்னருட் சந்நிதி வாசலில் வந்தடைந்தால்
தூசுற்ற பாவந் தொலைந்திடுமே யினித்தோற்றி யென்முன்
நீசற்றிரக்கம் புரிதி கண்டாயருணனின் மலனே
தேசுற்ற சோலைசெறி கும்பழாவளைத் தேசிகனே.

26 மாயம் பெருத்துப் பிடர் பிடித்துந்த வளர்த்துவைத்த
காயம் வருந்தத்திரிந்தலைந்துன்னற்கருணை யென்னும்
நேசம்பிடித்திங்கு வந்து வந்தேனைய நின்னருடா
வாசஞ்செறி கும்பழாவளை மேவிய வானவனே.

27 நின்மலமாகிய நெற்றியங்கண்ணு நிறைகுடம் போற்
றென்மயமாகிய தொந்தி வயிறுந் துதிக்கையுமாய்
என்மயமாய் வந்தெனக்கே யருள்புரி யேரம்பனே
பொன்மயமாங் கும்பழாவளை மேவிய பூரணனே.

28 வேதண்ட நேர்புயன் வேலாயுதன் பணிவேலை செய்யக்
காசொன்றுமில்லைக் கடன்றருவார் களுங் காணெனையா
தாய் சற்றிரங்கி மகவுக்கருள் செயுந்தன்மையைப்போல்
நீசற்றிரக்கம்புரி கும்பழாவளை நின்மலனே.

29 ஈரேழுலகு முறையே யுறைதரு மெவ்வுயிர்க்கும்
பேராதியான பெரும் பொருளே யுன்றன்பே றெனக்கு
நேராகத் தந்தென்னை நீயருள்வாயினி நீள்கயல்கள்
சீரான வாவிசெறி கும்பழாவளைத் தேசிகனே.

30 பூரணமான புகலிடந்தாவிப் புவனமுய்ய
வேரணியால நிழலி விருந்தருளே பொழியுங்
காரணனுர் கருணகரனுர் கறைக் கண்டரருள்
ஆரணனே கும்பழாவளை மேவிய தற்பரனே.

31 அற்புதமானவுன் பாதார விந்தமடைய வெண்ணி
யிப்புவி மீதினிலேயடைந் தேன்றுதியேது செய்வேன்
முற்சனனத்தில் முயற்சி செய்தேனில்லை மூஷிகமூர்
பொற்பு மிகுந்து நிறை கும்பழாவளைப் புங்கவனே

32 அல்லும் பகலுமுனை நினையாமலயர்ந்தலைந்தேன்
செல்லும் பொழுதினிச் செய்வதென்றுமெனத் தேற்றுகில்லேன்
நில்லென்றுகாலன் வருவனப்போ வந்து நீயருள்வாய்
கல்லொன்று வாவிசெறி கும்பழாவளைக் கைக்குன்றமே.

33 மேலாயுறைகின்ற வெத்தேவர் தங்கட்கு மேலவனே
காலாயுதக் கொடியோற்கருள் செய்திட்ட கண்ணுதலே
பாலாழி போலுன்னருளடியேன் பெறப் பார்த்திரங்காய்
மாலான சோலை செறிகும்பழாவளை வான்பொருளே.

34 பாசத்தி னீங்கிப் பரகதி சேரும்படி நினைத்தித்
தேசத்துலைந்து திரிந்து விட்டேன் வினைதேய்க்கவல்ல
மாசற்ற நின்னிரு பாதத்தி லென்மனம் வைப்பதற்கு
நீசற்றருள் கும்பழாவளை மேவிய நின்மலனே.

35 கண்ணுனவுன்னைப் பிரிந்தின்றளவுங் கலங்கிமிகப்
புண்ணுகி நெஞ்சம் புழுங்குதையாவுன்றன் பொற்பதத்தை
எண்ணுத வென்பவச் சோகத்தை மாற்றியினி யருள்வாய்
பண்ணுன சோலை செறிகும்பழாவளைப் பாக்கியமே.

36 பூரணனே புவனங்களெல்லாம் புகழ் பொங்கவரும்
காரணனே யென்னைக் காத்தருள்வாய் கடைக் கண்ணருளால்
ஆரணந் தேடியுங் காண்பரிதாகிய வானந்தமே
தோரண மேவு மதிற் கும்பழாவளைத் தூமணியே.

37 ஏர்சேர்ந்த வுன்பதமெண்ணாத தீவினைக் கென்செய்குவேன்
பார்சேர்ந்த மன்னுயிரானவை போற்றும் பரம்பொருளே
நீர்சேர்ந்தவர்கள் நினைக்கின்ற போகநிலை நிறுத்துங்
கார்சேர்ந்த சோலை செறிகும்பழாவளைக் கண்ணுதலே

38 புண்ணிய பாவப் பயனுகர்ந் தெங்கும் புகுந்துபுகுந்
தண்மி மயங்கித் திரிந் தலைந்தேனல்லருள் தருவாய்
கண்ணுத லுன்னிரு பாதார விந்தங் கருதி நின்றேன்
பண்ணுயர் கீதஞ் செறிகும்பழாவளைப் பாக்கியமே.

39 அரனார்தரு மகவாய் வந்தெனக்கிங் கருந்துணையாம்
பரனே யகிலப் பரம்பொருளே பரிபக்குவமாம்
அரண்மேவு மோட்ச மருளுதி யானுன்னடைக்கலங்காண்
தரமேறு சோலை செறிகும்பழாவளைத் தற்பரனே.

40 மாமுகமாய் வந்தடியார் துதிக்கு வளர்கருணை
சேர்முகமாகிய தேசிக யானுன்றன் சிற்றடியேன்
நேர்முகமாகி வந்தென்னை யிங்காளுதல் நின்கடன்காண்
கார்முக மாமதில் சேர்கும்பழாவளைக் காரணனே.

41 மாதாவில்லாத மகவதுபோல வருந்தி நின்று
தீதாஞ் செனனப் பரவையிற் சேர்ந்து திகைத்துலைந்தேன்
நீதாலிரக்கம் புரியிலுய்வேனென்னை நீபுரப்பாய்
தாதார் பொழில்செறி நற்கும்பழாவளைத் தற்பரனே.

42 அடித்தாலு முன்றனடியனை யாவருளாள் வதின்றி
விடுத்தாலு முன்றனடியனையா வெவ்விறன் மறலி
பிடித்தாலு முன்றனடியினை வாழ் பெரிதானகதி
தொடுத்தாலு முன்னடியான் கும்பழாவளைத் தொல்பரனே

43 கயமுக வுன்னிரு பாதார விந்தங் கருதிநொந்தேன்
கயமுகனும் பெருச்சாளியிலேறியென் கண்முன்வந்து
பயமுகந்நீர்த்துன் பரகதி ஞானம் படியச் செய்வாய்
புயல்முகமாம் பொழில்சேர் கும்பழாவளைப் புங்கவனே.

44 ஈசுரனாரருள் வானவனே யெழியேனிடத்திற்
பாசமதானதுயர் தணித் தாண்டுன் பதந்தரவுன்
மாசகல் பாத மிரண்டையு மென்றலை வைத்தருள்வாய்
காசகல் சோலை செறிகும்பழாவளைக் கற்பகமே.

45 உட்பொருளாகி யுலகுயில் பூதமுவை முதலா
நற்பொருளாகிய நாயகமே யருணன்குதருஞ்
சிற்பரனார் தருந் தேசிகனே செம்மை சேர்தருமுன்
பொற்பதமே யருள்வாய் கும்பழாவளைப் புங்கவனே.

46 வருந்துணை யாருமில்லாமலுன் பக்கலீல் வந்தடைந்தேன்
அருந்துணையாயெனை யாண்டருள் வாயதிவேகமுடன்
பொருங்கரி மாமுகனே வனின் முற்றிய புங்கவர்க்குப்
பெருந்துணைவா கும்பழாவளை மேவிய பேரின்பமே.

47 செந்தேன் குதிக்க வளிநின்று பாடுஞ் செழுமலர் சேர்
சந்தேய் துடவை செறியுமுன் சந்நிதி சார்ந்துமனம்
நொந்தேயுனது பதநிழல் வேண்டுமென் றேவகல
வந்தே யருடருவாய் கும்பழாவளை வானவனே.

48 திருஞான வெள்ளத்தி லாளப் பெருமற் றியங்கி நின்றேன்
அரனார் தருமமுதே யடியேனுன் னடைக்கலமுன்
சரணாரவிந்தத் தடமதில் மூழ்கத் தயவுசெய்வாய்
வரமேவு சோலைசெறி கும்பழாவளை வானவனே.

49 ஐங்கரனே யருட்பாசாங்கு சந்தரித்தாகு வெனுந்
தங்கிய வாகன மேறியுன்னன்பர் தழைக்க வென்றும்
இங்குன் கிருபை பொழிதரவா நல்லிளங்குயில்கள்
பொங்கிய சோலைசெறி கும்பழாவளைப் பூரணனே.

50 குருவாகி வந்துன்னடியேன் வினையின் குறைதவிர்க்கக்
கருவே புகுந்திடிற் காண்கின்ற வேதனைக் கட்டறுத்துன்
னருளே நிறைந்திடு மானந்த வாரியை யள்ளி யுண்ணத்
தருவாய் பொழிற் கும்பழாவளை மேவிய தற்பரனே.

51 நேசம் பொருந்தி மறைகள் துதிக்கின்ற நின்பதத்தில்
வாசம் பொருந்திய மாங்கனி வாழை வருக்கையுடன்
பாசங் கழலும்படி பாலமுது படைத்திடுவேன்
தேசம்புகழ் கும்பழாவளைமேவிய தேசிகனே.

52 ஆராதனை செய்தடியினை பேணி யகத்திலன்பு
வாராதிருந்த வறுமையினேன் மனம்வாடி நொந்தேன்
சீரான நின்னருளீர் பெறில் யானுய்கை திண்ணமையா
நேராக வந்தருள் தாகும்பழாவளை நின்மலனே.

53 அஞ்சாமலுன்றனடி பணியாமல் கந்தையினூற்
பஞ்சாகி யிப்பிரபஞ்ச வெந்நோய் சுடப்பாடுட்டேன்
எஞ்சாமலுன்றனின மலர்ப்பாத மெனக்கருள்வாய்
மஞ்சார் மலர்ப்பொழில்சேர் கும்பழாவளைவான் பொருளே.

54 வஞ்சனை பொய்கள் வளர்ந்து வருத்துமிவ் வையகத்தில்
விஞ்சுங்களவு கட்காம நெருங்கி விதனிப்பவால்
அஞ்சலென்றுற்ற வொருதுணை நீயுன்னடைக்கல நான்
கஞ்சமலர்ச்சுனை சேர்கும்பழாவளைக் காரணனே.

55 ஆகாத காலத்தலைந்து நொந்தேனறியாமலுன்றன்
சேகார் பதப்புணை தேடுந்துறையுந் தெரிகிற்றிலேன்
நீகாணெணக்கு நெடுந்துணை யுன்றறிலை யருள்வாய்
வாகார் கயமலர்சேர் கும்பழாவளை வானவனே.

56 கூரார்ந்த தந்தத் தொருகோட்டினுற் கயக்குன்றெறிந்த
பேரார்ந்த ஞானப்பெருங் கடலேயுன்றன் பேரருளால்
நேரார்ந்தளித்த தென்னை நீபுரப்பாயென்று நீண்முகில்கள்
காராந்த சோலையமர் கும்பழாவளைக் கற்பகமே.

57 முப்போது முன்னிரு பாதார விந்தம் முதனினைந்து
கைப்போது கொண்டு கசிந்துருகாத கசடனெனை
எப்போது மீர்க்குஞ் சனனத்தை நீக்க வெனக்கோர் மருந்
திப்போது நீயருள்வாய் கும்பழாவளை யேரம்பனே.

58 முட்டாமரையிலுறைவோ னெனக்கென முன்னெழுதி
விட்டான் சனனப் பரவையுட் சேர்ந்து மெலிந்தலைந்தேன்.
எட்டாத பாதமெனுமுன் புணையை யெனக்கருள்வாய்
மட்டார் மலர்ப் பொழில்சேர் கும்பழாவளை வாரணமே.

59 நேசத்துடன்றிருக் கோவிலில் மேவிநினை நினைந்து
பூசைக் குரியன காணவைத்தே நின்று பூசிப்பவர்
பாசத் தொடரறுத் தாளுமெந்தாயுன் பதமருள்வநய்
வாசத்துடைவைசெறி கும்பழாவளை வான்பொருளே.

60 நீரைச்சடையில் வைந்தாண்டருணு தனிமிர்ந்தவுண
ரூரைத்துகழ் செயவுற்ற வந்நாளிலுனை மறுக்கத்
தேரச்சிற வறுத்தன்னவன் வேண்டத்திருவருள்செய்
நேரற்ற நின்னருள்தா கும்பழாவளை நின்மலனே.

61 மெய்யாகவேல ருலகமெல்லா நொடிவேளைவரப்
பொய்யாகவே யிருவோரையுஞ் சுற்றிப் பொழுதில்வந்து
கையார மாங்கனி வாங்குமுன் பாதகமலத்தை வைத்
தையாவெனக் கருள்வாய் கும்பழாவளை யைங்கரனே.

62 கார்கொண்ட கூந்தற்கவுரிபொய் வார்த்தையைக்கண்டுருத்துத்
தார்கொண்ட மாயன்றனக்கிடு சாபந்தணிக்க வெண்ணி
நேர்கொண்டவற் கருணின்மலனே யென்னை நீபுரப்பாய்
ஏர்கொண்ட வாவிசெறி கும்பழாவளை யேரம்பனே.

63 பண்டேமுனி சொல்விசாரித்து மேல்வரும் பாரதத்தை
விண்டோடுயர்கின்ற மேருச்சிலம்பின் மிளிர்கின்றகோ
டொன்றேயோசித்து வரைந்தனை யென்றலையுன்பதம்வை
தண்டேன்றுளி கும்பழாவளை மேவிய தற்பரனே.

64 சீரார்ந்த வள்ளி தினைப்புனத் தோடத்திருவருளால்
நேரார்ந்த வேலர் வசமாக்கிவிட்ட நெடுந்தகையே
ஏரார்ந்த வுன்னிரு பாதாரவிந்த மெனக்கருள்வாய்
காரார்ந்த மாமதில்சேர் கும்பழாவளைக் கற்பகமே.

65 மடத்தனமாயுன்பதம் பணியாமலிம்மா நிலத்தி
லிடர்க்கடற்பட்டிங் கிளைத்தலைந் தேனினியேது செய்வேன்
அடைக்கலமாய் வந்தடைந்தனன் காணென்னிலன்பு வைத்துக்
கடைக்கட்கருணை தந்தாள் கும்பழாவளைக் காரணனே.

66 மைகொண்ட காலன் வரும்பொழுதே முன்வளர்த்துவைத்த
பொய் கொண்டவிந்தவுடம் பெனக்கென்னிப் பொருளெனக்
மெய்கொண்டவுன்னிருபாதாம்புயத்துணைவேணுமையா[ கென்
செய்கொண்டபண்ணை செறிகும்பழாவளைச் சிற்பரனே.

67 மின்னே யனையவொளி யெங்குமாகி விளங்குகின்ற
பொன்னே யனையவுன் பாதாரவிந்தம் பொருந்துதற்கு
முன்னே யுனதருள் பெற்றுவைத் தேனில்லை மூஷிகத்தி
லின்னே யமர்ந்தருள்தா கும்பழாவளை யேரம்பனே.

68 பாரிற் குதிக்கின்ற காவிரி வாரியைப் பார்த்திரங்கிச்
சீரிற்சிறந்த முனியங்கு வேண்டத் திருக்கரத்தால்
வாரிக்குறியவன் குண்டிகை நீரை வளர்த்தநுபோற்
சாரிக் கணத்தெனைக்கா கும்பழாவளைத் தற்பரனே.

69 அருளே நிறைந்த வென்னானந்தமே யுன்னடியனுக்காம்
மருளே யகற்றி மற்றென்னை யிங்காளென்றும் மையமில்லாப்
பொருளே பொருளினொளி யெனலாய வென்புண்ணியனே
தெருளே சிவன்மகனே கும்பழாவளைத் தேசிகனே

70 நெஞ்சம் மறந்து நிலைதளர்ந்தாலும் நெறியகன்று
வஞ்சம் பொருந்து வெஃபேய் பூதந்தாக்க மயக்குறினும்
விஞ்சுந் துயரொடு மற்றுல காசைகள் மேற்படினும்
அஞ்சலென்றென் முனிற்பாய் கும்பழாவளை யைங்கரனே.

71 ஆற்றற்கரிய கருக்குழி சேருமரும் பிறவி
மாற்றற்கெனக்கு மருந்தொன்றுதாவம் மருந்தெ தெள்ளுல்
ஏற்றித் துதித்தற்கரிய வுன்பாதமிதே யருள்வாய்
சேற்றுப்பழனஞ் செறிகும்பழாவளைத் தெள்ளமுதே.

72 மெய்யானவுன்ன ருட்சந்நிதிவாசல் விரும்பிவந்து
பொய்யாத பூசை நிவேதனங்கண்டு புகழ்ந்து நின்றென்
கையாற் றொழுதுங் கருத்தாலினைந்துங் கசிந்துருக
ஐயாவருள் தருவாய் கும்பழாவளை யைங்கரனே.

73 முன்னே யமரர் கடலைக் கடைய முயலுமக்காற்
றன்னே ரிலாதவுன் பாதந் தொழாக்குறை தாக்குதலால்
முன்னே யெழுநஞ்சின் வன்மையங் காற்றுமுழுமுதலே
இன்னே யருள்தரவா கும்பழாவளை யேரம்பனே

74 தேவா வெனக்கு முன்னே வரைந்தானிவ்விதியதனை
நாதாவுனக்கின்றுரைக்க வென்றே வந்துநானடைந்தேன்
ஆதாரமாயுன்னருட்புணை யேறி யடியனுய்ய
நீதானிரக்கம்புரி கும்பழாவளை நின்மலனே.

75 நல்லாய் விரும்பியுன் றொண்டேபுரிந்து நலம்பொருந்தக்
கல்லா வெளியனைக் காத்தருளென்முன் கடிதுவந்து
நில்லாமற் காலனெனைத் தொடும் வேளையில் நீதுணைகாண்
பல்லோர் துதி கும்பழாவளைமேவும் பராபரனே.

76 காயத்தை நம்பியுன் பாதந்தொழாமற் கருத்தழிந்து
மோசத்துறையுள் முடிந்திறுமென்னை முனிந்திங்கெமன்
பாசக்கயிற்றை விட்டீர்க்கு மந்நேரமுன்பார்வை நல்கி
நேசத்தை வைத்தருள்வாய் கும்பழாவளை நின்மலனே.

77 உள்ளுக்குள்ளாகி யொளிக்கொளியாகு நல்லுத்தமனே
எள்ளுக்குளெண் ணெயெனவெங்குமாய் நிற்குமேரம்பனே
தள்ளற்கரிய வினையுடையேற் கருள்தாலில்லையோ
கள்ளூற்ற சோலைசெறி கும்பழாவளைக் காரணனே.

78 பாரோர் துதிக்குமுன் பாதத்து வந்து பலதரமும்
சீராகப் போற்றித் தெரிசிக்கவே மனஞ் செல்லுதையா
ஏராரு முன்னிரு பாதார விந்த மெனக்கருள்வாய்
காரானை மாமுகனே கும்பழாவளைக் கற்பகமே.

79 வெள்ளிக் கிரியிலுறைகின்ற நாதன் வியக்கவவன்
பிள்ளைத் துயரந் தவிர்த்தருளீந்த நற்பேரின்பமே
எள்ளத் தினையுமுனை நினையாமலிருந்த வென்றன்
உள்ளத் துயரமொழி கும்பழாவளை யுத்தமனே.

80 மின்னே செறிந்த குடைநின்றலங்க மிளிர்கொடியும்
பன்னே செறிந்துயர் வட்டமுமாடப் பலவிருது
முன்னே யதிரவுயர் வேதமோலிட மூஷிகத்தில்
இன்னே யிவர்ந்தருள்தா கும்பழாவளை யேரம்பனே.

81 அஞ்சிப் பயந்து நின்பாதார விந்த மடைந்துனது
தஞ்ச மென்றேத்தத் தயவுசெய்வாய் தரியாதெழுந்த
நஞ்சைக் கழுத்தில் வைத்தாண்டருணு தன நயந்துபெற்ற
மஞ்சைக் கிழிக்குமதிற் கும்பழாவளை மாமுதலே.

82 மாடேறுமீசர் மலர்செறிசோலை வருதலுன்னித்
தோடேறுசேல் விழிமங்கையுடன் வரச் சொல்லரிதாய்
மாடான வேதமுதற் பொறிமீதில் வருமுன்னிரு
தாடா பொழிற் கும்பழாவளைமேவிய தற்பரனே.

83 தாய் தந்தையாகியுல கிலுள்ளோர் களுன்றனடைந்தால்
நீயவர் கேட்கும் வரமளித்தாளும் நிலைநிறுத்தச்
சேயுருவான வுன்பாதார விந்தஞ்சிரசில் வைத்தேன்
பாய்புனல்சேர் கும்பழாவளைமேவிய பாக்கியமே.

84 பாக்கியமான நின்சந்நிதி வாசலிற் பன்முறையும்
நீக்கமில்லாவன்பு பின்னின்று நோக்க நின்னிள் பதத்தை
ஆக்கமென்றெண்ணி யநுதினம் போற்றவருள் செய்குவாய்
பூக்கமழ் சோலைசெறி கும்பழாவளைப் புங்கவனே.

85 முன்னே யுனைக்கண்டு மெய்த்திறம் போற்றி முதிர்ந்தவன்பால்
இன்னேயடியனெனக் கருளென்று மென்னேனழைமனம்
பின்னே யொருபொருள் பற்றிடிற்பின்சென்று பேதுறுமால்
என்னே யிதற்குநிலே கும்பழாவளை யேரம்பனே.

86 முச்சுடராய கிலங்களுமாகிய மூர்த்தி தந்த
நற்சுதனே யென்மலவிருள் போக்கநயந் தெனைப்பாரி
மெய்ச்சுடரே கலை கற்றவரேத்தி மிகமகிழும்
அச்சுதனர் மருகா கும்பழாவளை யானந்தமே.

87 என்னைப் படைத்திங்கெனக் கொருசாண் குழியேன்படைத்தாய்
பின்னைக் கிடங்கு நிரப்ப வென்றாலிது பேரிடர்காண்
உன்னற்கரிய பரவெளியா முன்னுறுதிதந்தாள்
தன்னெப்பிலாமுதலே கும்பழாவளைத் தற்பரனே.

88 சொற்பொருளே யென்றனுட்பொருளே மெய்ச்சுருதிக்கெட்டா
நற்பொருளே யென்றனுயகமே நைந்து நைந்தவுணர்
முற்பகல் நீறுபடநகைத்தோனருள் முன்புபெற்ற
அற்புதனே யருள்தா கும்பழாவளை யைங்கரனே.

89 பற்றுறெனக்கொரு பாசமொப்பாகுவர் பற்றியென்னைச்
சுற்று நின்றூர்க்கும்பிணி பலவாயினதுன்பமிது
முற்று நினக்குப் பணிசெய வேண்டினன் மூஷிகத்தி
னுற்று திரிக்கத் திருக் கும்பழாளை யூர்பரனே.

90 உற்றுரென்றுரையுஞ் சொல்லவொண்ணு தெனக்குற்றவரும்
பற்றுரென்றுகுவர் பற்றுவதென்னினிப் பற்றுவதுன்
பொற்று மரைப்பதம் போற்றுவதுன் புகழ் பொய்மையின்றிக்
கற்றுர் தொழுங் கும்பழாவளை மேவிய காரணனே.

91 என்னே யுனக்கிங்கடிமை யென்றேதுவ னேந்திழையார்
பின்னே மனஞ்சென்று பேதுறலாகுவன் பேருலகில்
பொன்னே பொருளெனப் பொய்பல பேசிப் புலருவனல்
தன்னேரிலாக் கும்பழாவளைமேவிய தற்பரனே.

92 வாழ்வதுஞ் சிற்பகலாய்வதுஞ் சிற்சில வாட்டும் பிணி
ஆழ்வதுந் துன்பக்கடலென்று நைந்தனனுகி நின்னைத்
தாழ்வது வேண்டிற் றடுத்தருள்வாயெனத் தாவிவந்தேன்
ஆள்வது வேண்டு மருட்கும்பழாவளை யங்குசனே.

93 ஐம்புலவேடுவரங்கிங்கு வாவென வாட்டி நிற்பர்
ஐம்படை வேடனு மாய்மலர் தாங்கி யடருவனுல்
இம்பரில் நோய்பசி தாகமும் வாட்டுமிவைக் கஞ்சினேன்
உம்பர்கள் போற்றுமுயர் கும்பழாவளை யுத்தமனே.

94 சித்தந்தளர்ந்து திகைத் தலமந்து சிறிது முன்னே
அத்தங் குவித்தஞ்சலீ செய்தலின்றி யனுதினமும்
மத்த மயின்றவர் போல்மதி குன்றி மயங்குமென்மேற்
சித்தமிரங்கியருள் கும்பழாவளை தேசிகனே.

95 பாயோடழுந்திப்பறி பொருள் போன்று பயிலுமென்றன்
நோயோ பெரிதம்ம யானே சிறிய னெடிப்பொழுதில்
தாயோ வெனவிவண் வந்தருள் தாமந்திதன் பொழிலிற்
றுயோ டெழிற் கும்பழாவளைமேவுந் தயாபரனே.

96 நீரார் சடைமுடி நின்மலன்றந்த நிமலவருள்
தாராவிடிலுய்கை தானுமுண்டோ மற்றுச் சாற்றுவதென்
ஆராயினீயன்றி யார்காணெனக்கிங் கருள் தருவார்
வாராய் வளர்பொழில்சூழ் கும்பழாவளை வாரணமே.

97 காயத்தை மெய்யென்று நம்பலன் யானின்னருள் தருஞ்ச
காயத்தை மெய்யென வேண்டுவனுற் கடிதேயருள்செய்
காயத்துடன் கடுங்காலனென்னுவி கவர் பொழுதிக்
காயத்திகழ் கும்பழாவளை வாசகலங்கலென்றே.

98 என்னுவுனக்குரை சொல்லுதல் வேண்டி யெழுந்துசில
சொன்னுலுஞ்சொல்லி யொழியாமை நோக்கித்துழும்புவதால்
முன்னுகு நற்றவமின்றி முயன்றிடின் முற்றுறுமோ
இன்னே யெனக்கருள்தா கும்பழாவளை யேரம்பனே.

99 மெய்யேவளர விதனங்கள் சாயமிடியகலச்
சைவாகமங்கள் தழைத்தே வளர்ந்திடத் தாமமெனப்
பையாடரவம் புனைந்தோன் குறிகள் பலிதமுறச்
செய்வாய் திருக்கும்பழாவளை மேவிய தேசிகனே.

100 சைவந் தழைக்கச் சமயங்கள் வாழத் தவமுனிவர்
செய்யுந் தவசுபெருக நற்புண்ணியந் தேங்கிமிகப்
பொய்யும் புலையு முதலான பாவங்கள் போயகல
வையெம்பரமனருள் கும்பழாவளை வான் பொருளே.

## நூற்பயன்

1 சீர்பொங்கு நற்கும்பழாவளை மேவிய சிந்துரத்தை
ஆர்வம் பெருகங்கத்துள் வைத்தேத்து மவர்க்குவினை
தேர்வெம்பகல் முனர்ச் சேரும்பனி யெனத் தேயுநெஞ்சே
சாரும்வினைகடவிர நின்றேத் தவன்முளிணையே.

2 ஆனந்த நாதனை யங்குசமேந்தியை யன்பருய்யத்
தானென்ற மூஷிகமூர் கும்பழாவளைத் தற்பரனைத்
தேனின்ற மோதக மேந்திய கையனைத் தெண்டனிட்டால்
நானென்ற காலன் வருமோ துயரென்ன நன்னெஞ்சமே.

3 ஈசன்குமரனெமக்கருள் செய்ய வெழுந்தருளி
நேசத்துடன் வந்தவதரித்தானன்பு நெக்குருகித்
தேசுற்ற தெங்கிளநீர் கொடுபூசனை செய்தவர்தாம்
ஆசைக்கியைய வருள் பெறுவார் கும்பழாவளைக்கே.

ஃ

கணபதி துணை

# அளவைக்

# கும்பழாவளைப் பதிகம்

## காப்பு

சீருற்றவண்டலைத் தண்டலையுமண்டு புனல்
        செறியுமென்மலர் வாவியுஞ்
செந்நெல்விளை கழனியுமன்னிநிலை பெற்றிடுந்
        திருவளவையம் பதியிலே
சாருற்றநினதிதழியணியு மகுடமுமிளஞ்
        சசியன்ன வொருமருப்புந்
தழைசெவியிரண்டுமுக்கண்ணு நால்வாயொடு
        தயங்குமைங்கரமு முதலாய்
ஏருற்றவங்கத்தினழகதனை யெப்பொழுது
        மிதயமிசைவைக்கு மடியே
னிச்சைகொடுநின் பாதமலர்தலைக் கொண்டிசைத்
        திடுதொடையை யேற்றருளுவாய்
வாருற்றபலவணியு நேருற்றகும்பழா
        வளையிலருள்விளை வினுடனே
வந்தமததந்திமுக வெந்தைபரமானந்த
        மாவிக்கினேசுவரனே.

## நூல்

செந்தமிழ்க்கவிஞர் புகல்கவிவகைகள் கலைவகைகள்
        தெளிவுறுந்துறையின் முறைகள்
செப்பிடுமிலக்கண விலக்கியவிதங்களின்
        றிறமறிகிலாத சிறியேன்

தந்தைமுன் மகவுமொழி மழலைபோனின்மீது
    சாற்றுமென் கவிதைதனைநின்
றகுதிருவுளங்கொண்டெனையுன தடிமையாக்கொண்டு
    தண்ணளிசுரந்தாளுவாய்
இந்திரற்காமுன்புநந்தவன மதனினதி
    யெய்திடச்செய்தகோவே
யேழையாமென்மீது கருணைநதிபாச்சியெனை
    யீடேறவருள்வதரிதோ
வந்தவினைவிக்கின மகற்றுநந்தெய்வமே
    வளமருவிடுங்கும்பழா
வளைவந்தவொருதந்தமுறுதந்தி முகவெந்தை
    மாவிக்கினேசுவரனே.

நிதியேதுமற்றவன் பலதானமுஞ்செய
    நினைந்தென்னவொருநன்மைமுன்
னிலமிசைபுரிந்திடாப் பாவியேனின்பாத
    நிழறங்கிவாழ்வெய்தவுந்
துதிமேவுநினதடியரொடு நிதம்பழகவுஞ்
    சுகஞானநெறியுணர்த்துஞ்
சுத்தசற்குருகடாட்சம் பெறவுமெண்ணினேன்
    றூயநற்கருணைபுரிவாய்
கதிமேவுமூஷிகந்தனி லேறுமுதல்வனே
    கௌரிதந்ததிடுபுதல்வனே
கவினுற்றவளவைநன்ன கருத்துளார்தமைக்
    காத்தருள்செயுங்கடவுளே
மதிமேவுசெஞ்சடைப் பரமனருளச்செவ்வி
    மலிகும்பழாவளையிலே
வந்துறையுமைந்துகர வெந்தையேதந்திமுக
    மாவிக்கினேசுவரனே.

சென்னமுதலிதுகாறு முலகவிடையத்தினிற்
    சென்றவென்சிந்தையதனைத்
தெளிவித்துநன் மார்க்கவழியுய்த்தியான்செய்த
    தீவினையெலாமகற்றி
கனவிலும்மனதிலுறு பெண்ணாசைமண்ணாசை
    கருது பொன்னாசையென்னும்

கடலிடையமிழ்ந்தா துன்ருளொனும்புணைகொடு
கதிக்கரையெனக்கருளுவாய்
அனவரதமுங் கனகசபையதனினடனமிடு
மானருளவருமைந்தனே
மையயனேயங்குசக்கையனே நம்பினர்க்
கருள்புரிந்திடுமெய்யனே
மனதிலுறுதுயர்களைந் தடியரைக்காக்கின்ற
வரதசீர்வளர்கும்பழா
வளையில்விழைவுடனுறையுமழகளிற் றெழில்வதன
மாவிக்கினேசுவரனே.

இல்லறமதாமிந்த நிலையன்றிவேறொன்று
மெய்தப்பெருதசிறியே
னிதினின்றுமற நெறியினுழுகிடாப்பாவியா
மேழையடியேற்கிரங்கி
தொல்வினையையோட்டிமிக நல்லறிவையூட்டியொரு
தூயநெறிகாட்டிமேலுஞ்
சுகவாழ்வுதந்துநினையிகவாது நாளுநான்
துதித்திடவிதித்தருளுவாய்
அல்லல்மிகவேயுற்ற சோமகாந்தன்வினை
யகற்றியருளுங்கணேசா
வடியேன்படுங்கொடியமிடி தொலைத்தருள்நி
னகத்திடையிரக்கமிலையோ
வல்லவைமஞ்ஞளவெண்ணுள்ள முறைதாளநன்
மருவிதழிவாய்ந்ததோள
வம்புலாந்தருதுன்று கும்பழாவளை தங்கு
மாவிக்கினேசுவரனே.

வஞ்சகமுடன்சூதுகளவு பொய்யுபாயமுதல்
மாயமிகவேகற்றிடும்
மாதர்மேற்காதல்வைத்தவ ரெறிந்திடுமோசக
வலையிலேசிக்கியவரைத்
தஞ்சமெனநம்பியுழலுயுனுங் கடையனுந்
தமியனேனுளப்பசாசைத்
சற்றினியடக்கிநின் பொற்பதமிருத்தியரு
டந்தாள்வதெந்தநாளோ

செஞ்சரண்வருந்தவொருகுஞ்சரமதாய் வேடர்
சிறுமிமுன்றுணைவனுக்காய்த்
திளைசெறிபுனஞ்சென்றுமுனமருள்விநாயகா
திகழளவைநகர்நாயகா
மஞ்சுதவழ்தெங்குகமுகங்களுநெருங்கியயல்
வளர்கும்பழாவளையின்வாழ்
மதகம்பகும்பகூரொளிர்கொம்பதும்பிமுக
மாவிக்கினேசுவரனே.

சோறிடுதுரித்தியினையாசைபொதிபேழையைச்
சுடுமெரிக்குரியவிற்கைத்
துன்புறுபிணிக்குகையைநாய்நரிகள்பேய்கழுகு
சூழ்பருந்தின்விருந்தை
நாறிடுங்கிருமிக்குரம்பைதனைமலமூறு
நவவழிப்பாண்டமதனை
நம்பிவீணாகநாளைக்கழித்தேனினியு
நல்லருள்புரிந்தாளுவாய்
ஊறிடுங்கருணையுடன்மூலவாதாரமஃ
துறைந்திடுமகாகணேசா
வுந்துருவதாகிமுன்றந்தைதனதுந்திரத
முறுமச்சறுத்தகோவே
ஊறில்கவினளுவையம்பதிமேவும்பழா
வளையதனிலுறையுமிறைவா
மதகரடவிகடதடகடகரியின்வதனமுறு
மாவிக்கினேசுவரனே.

தந்தையுடனன்னையைத்துணைவர்தமைமனைவியைத்
தனையர்சுற்றத்துளோரைச்
சாருமித்திரர்வீடுமாடுகாணிகளை நான்
றக்கதுணையென்றிருந்தேன்
இந்தவுறவினருமிப்பொருள்களுமிருந்துமென
தினியகட்கருணையல்லா
லிறுதியிலெனக்குவேறுறுதியேதிகபர
மிரண்டினுங்கருணைபுரிவாய்
கந்தமுறுமுப்பழமொடப்பமவல்மோதகங்
கமழ்கரும்பிரசமுடனே

கருதும்வடையடைசுமிடமுடையகுடவுதரனே
கருணைபொழிதிரிநயனனே
மைந்துறமுமாசிலாச்சுந்தரவொய்யாரனே
மருவிதழியந்தாரனே
மத்தகயவதனபரிசுத்தவுத்தமசித்தி
மாவிக்கினேசுவரனே

இந்நிலந்தனில்வாழுமளவுமோரவமான
மிலஞுகிவாழ்ந்திடவுமேல்
யமபாசமணுகாதுவிலகவுமினிப்பிறவி
யின்றிநற்கதிறேவும்
பின்னுமூழ்வலியினுற்பிறவியெய்திடினுமப்
பிறவியினுநினதடிமையாய்ப்
பிரசமலரணையநினதடியிணையைமறவாத
பேறுமடியேற்கருளுவாய்
உன்னருங்கொடியஞுங்கயமுகன்றனைவதைத்
தும்பர்தந்தின்பமாற்றி
யோகையுடன்வாகைசுகவாழ்வினிதவர்க்குதவு
மொருவனேயரிமருகனே
வண்ணமயின்மீதேறுகந்தற்குமுன்வந்த
வள்ளலேதுள்ளுகயல்கள்
வாவுவயல்செறிகும்பழாவளையிலுறைகின்ற
மாவிக்கினேசுவரனே.

தந்தையல்லாற்பெற்றமைந்தர்க்கிரங்கிடத்
தாரணியிலாருமுளரோ
சாமியுனையன்றியிப்பூமியிலெனக்கொருவர்
தஞ்சம்வேறில்லையாதலால்
எந்தையேயடியேற்கிரங்கியெனையஞ்சலென்
றிடர்தவிர்த்தாளுவாயென்
னிதையமிசைகுடிகொண்டதெய்வமேநம்பினே
னென்னைநீகைவிடாதே
சிந்தையினினைத்திடிற்றித்திக்குமுக்கட்
செழுங்கரும்பேவிரும்புந்
தெள்ளமுதமேசெய்யகண்ணின்மணியேயொளி
சிறந்தசெஞ்சுடர்விளக்கே

வந்தனைபுரிந்துளோர்க்கினியகனியேசெல்வ
மருகும்பழாவளையிலே
வருமைந்துகரதந்திமுகவெந்தையேநந்த
மாவிக்கினேசுவரனே.

அத்தனேயமலபரிசுத்தனேசித்திதரு
மண்ணலேசரணமருள்சே
ராதியேயொளிர்பரஞ்சோதியேசரணமென
தாருயிர்க்கிறைவசரணம்
நித்தனேசரணமென்னெஞ்சினிலுறைந்திடு
நிராமயசொரூபசரணம்
கத்தனேசரணமைங்கையனேசரணமோங்
கங்கணபதேயசரணங்
கடிகமழுநின்பாதகமலமேசரணமியான்
கருதியவரங்கடருவாய்
மத்தமதயானைமுகவள்ளலேகள்ளுலவு
மலர்துன்றுசோலைசெறியும்
வளமருவுகும்பழாவளையுறையுமெந்தையே
மாவிக்கினேசுவரனே.

பார்வாழியளவைநன்னகர்வாழிபகர்கும்
பழாவளைப்பதிவாழிநூல்
பயிலுமார்பந்திகழுமந்தணர்குலம்வாழி
பன்னுமெழிலாலயத்தின்
சீர்வாழிவேதாகமங்கலைகள்சாஸ்திரஞ்
செப்பமுடன்வாழிநாளுஞ்
சிந்தைகொடுவந்தனைபுரிந்திடுமெய்யடியார்க
டிரமொடுசிறந்துவாழி
தாராளமாகவருதிங்கடொறுமும்மாரி
தான்பெய்துவாழிதமியேன்
சாற்றுபதிகம்வாழிகற்றகேட்டவரெலாஞ்
சந்ததமுமுய்ந்துவாழி
வாராழிசூழுலகிலுயிர்கடொறுமேவுறு
மகாகணேசன்றனிணைமா
மலரடிகள்வாழிகடனிகர்கருணையும்பெருகி
வாழிநீடூழிவாழி.

உ
கணபதி துணை

# கும்பழாவளை இரட்டைமணிமாலை

### காப்பு

### வெண்பா

காவிவிழிக் கிஞ்சுகவாய்க் கஞ்சமலர்ச் செஞ்சரணத்
தேவியர வாகவெனச் செப்புமொழி—யூவைவளற்
கன்றொழிக்கு மைந்துகரத் தந்திமுகற் சிந்திப்பாம்
இன்றொழிக்கு மெம்மிடரு மென்று.

### நூல்

### வெண்பா

தெள்ளுமு ணர்வுடையோர் செப்புதிருப் பாடலைப்போல்
கள்ளனேன் பாட்டுங் கனியுமோ—கொள்ளுமெழில்
வாய்க்குமதிற் கும்பழாவளைவாழ்ந் தன்பரிடர்
தேய்க்குங் களிற்றின் செவிக்கு

### கலித்துறை

செவிக்கின்பஞ்செய்நின்புகழ்பேசு நின்றன்றிருவுளந்தான்
கவிக்கிரங்குஞ்சிறிதேயென்று பாடிக்கலங்கிமனம்
தவிக்குமெனக்கருள்செய்ய வெழுந்தருடண்கடல்சூழ்
புவிக்குளுயர்கும்பழாவளை மேவியபுங்கவனே.

### வெண்பா

புங்கவனே தேவர் புகழ்கும்பழா வளைவாழ்
ஐங்கரனே யுன்ற னடைக்கலநான்—துங்கமறு
மையார் கருங்காக்கை வாயுணவா யென்னுடலம்
பொய்யா யழியும் பொழுது.

### கலித்துறை

துக்கம்கலநிஜனப்போர் கடுன்பந்துடைக்கவரும்
மிக்கசுதிரவனேகும்பழாவனே விண்ணவனே
நக்கனருண்மைந்தனே யுன்சரணநளினத்தின்கீழ்
புக்கடியேன்மகிழ்கின்றதென்றேவிப் புவியைவிட்டே.

### வெண்பா

விட்டேன் நினதடிமை மேதினியில் வாழ்க்கைதனை
தொட்டே னெனக்குஞ் சுகமுண்டோ—மட்டேறும்
செந்தாம ரைவாவி சேர்கும்பழா வனேவாழ்
எந்தா யறைவா வெனக்கு.

### கலித்துறை

எனக்குத்திருவுளமெள்ளளவேனு மிரங்கலில்லாய்
உனக்குத்தகுதிகொல்லோ கும்பழாவனேயுத்தமனே
அனேக்குத்திருவருளின்றே யெனினவ்வருங்குழவி
தனக்குத்துணையருள்செய்தற்கு முண்டுகொல்சாற்றுதியே.

### வெண்பா

சாற்றும் மறைமுடிபு தானுமறி யாதுநின்று
போற்றும் பெருநிலைமை பூண்டதே—தோற்றுமருட்
டெவ்வுணர்வுடையோர் சேர்கும்பழா வனேவாழ்
வள்ள லடித்தாமரை.

### கலித்துறை

தாமரைமேவுந்தடத்துறைவாழை சலத்திற்றத்தி
பூமருவுங்கமுகாடவிமேவும் புனல்வயல்சூழ்
தாமருவுங்கும்பழாவனே மேவியதுய்யவனே
மாமருவுங்கவியாற்றுதிப்பார் வினைமாய்ந்திடுமே.

### வெண்பா

மாறுப் பெருந்துயர்செய் வல்வினையால் யான்கலங்க
நீருயொழிக்காது நீயிருப்பின்—வேறுர்கொல்
செஞ்சாலி யோங்குவயல் சேர்கும்பழா வனேயாய்
அஞ்சாதி யென்னு மவர்

## கலித்துறை

அவத்தொழில்சற்றுமிலா வன்பினருமமரர்களுந்
தவத்தருமேத்துந்தனிமொழியன்றிச் சகத்திடைநான்
பவத்தளிந்தாவென்றரற்றுதலுஞ் செவிப்பட்டிடுமோ
புவித்தலைமேன்மைபெறு கும்பழாவளைப்புங்கவற்கே.

## வெண்பா

கேடுசெயும் பிணியாற் கீற்மகனான் நொந்தாற்றி
வாடவிடுதல் வகையன்றே—கூடுமளி
பூபாளம் பாடும் பொழிற்கும்பழா வளைவாழ்
கோபாலன் றன்மருகாகூறு.

## கலித்துறை

கூற்றும்வந்தாவிகொளா முன்னரூரவர்கூடிநின்று
நேற்றிருந்தாரெங்கொளித்தா ரெனமுன்னர் நீணிலத்து
சாற்றும்புகழ்க்கும்பழாவளை மேவியதற்பரனை
போற்றித்துதித்திடர்போக்கிடுவீர் வெறும்புல்லர்களே.

## வெண்பா

புன்பிறவி வேதனைகள் போதுமென வலறும்
அன்பரிடரகற்று மைங்கரன்—இன்ப
பெருந் தேனிகர் கும்பழாவளை வாழ்பெம்மான்
வருந்தா தெனைக்காக்கு வான்.

## கலித்துறை

வானாடர்போற்றும் வளக்கும்பழாவளைவானவநின்
தேனார்மலர்நிகர்சேவடிக்காளெனச் சென்றடைந்தேன்
கோனேகயமுகவற்கொன்றருளுங் குணக்குன்றமே
தேனேயினியென்னவேவறியேன் நின்றிருவுளமே.

## வெண்பா

உள்ள மெளுகா யுருகிடுமன்மற் கருளாம்
வெள்ளம் பொழிந்தருளும் வேழமே—துள்ளுகயல்
பைங்கழகிற் பாய்கும்பழாவளையில் வாழ்ந்தருளு
மைங்கரனே நீயேற் கருள்.

### கலித்துறை

அன்னையுநீகும்பழாவளைமேவிய வைங்கரனே
என்னையளித்திடுங்கத்தாவுநீ யினிப்புவியில்
முன்னவனேசிறியேன் யான்பிறக்கினின்முண்டகத்தாள்
தன்னையெப்போதும் நினைக்கும்படிவரந்தந்தருளே.

### வெண்பா

தந்தருளு மின்பந் தணிக்கும் மனத்துயரம்
கந்தனுக்கு மூத்த கருணையோன்—வந்ததுயரம்
நீக்கியிடுங் கும்பழாவளைவாழ் நித்தன்றன்
காக்குமென மொழிந்தக் கல்.

### கலித்துறை

கார்வினையென்னுங்கடலிடை வீழ்ந்துகலக்கமுறு
வார்துணையென்றலையுஞ்சிறியேற் குன்றணைந்துகரத்
தோர்கரநீட்டியெடுப்பிற்கெடுவ தென்னேவுனக்குப்
பார்புகழ்சீர்க்கும்பழாவளை மேவியபண்ணவனே.

### வெண்பா

பண்ணவனே நற்கும்பழாவளையில் வாழ்வுகொளும்
அண்ணலேயிப்புவி லடைமின்கள்—திண்ணமதாய்
கூற்றுவன் வந்தாவி கொடுசெல்வ னென்செய்வீர்
போற்றுதிரன் றன்சரணப்போது.

### கலித்துறை

போதுகைக்கொண்டுன்றன் பொன்னடித்தாமரை போற்றிசெய்
யேன், வாதுகைக்கொண்டுவசைபேசுமென்றன் மனக்கவலை,
யீதுசற்றேனுமிலாதொழிந்தேக வினியருள்வாய்
தீதுசற்றேனுமிலாக் கும்பழாவளைத் தெள்ளமுதே.

---

உ

சிவமயம்

அளவைநகர்

## கும்பழாவளை விநாயகர் பேரில் பாடிய

# கலிவெண்பா

### காப்பு

கட்டளைக்கலித்துறை

தேமேவுபொற்கும்பழாவளை மேவியதேவபரன்
மாமேவுவேழமுகன்சந்த்ரசேகர வள்ளலுக்கே
பாமேவுசொற்கலிவெண்பாவைப் பாடப்படியுமகிற்
காமேவுசித்தியளவை விநாயகன்காப்பதுவே.

கலிவெண்பா

பூமாதும்மாமாதும்பூக்கமழ் வெண்டாமரைவாழ்
நாமாதுஞ்சேர்ந்துநலங்குலவு-தேமேவு
பொன்னூரளகாபுரி நேரளவைதனின்
மின்னூர்பலவளங்கண்மேவியே நன்னயஞ்சால்
சூதங்கதலிபலாசொற்சுவை சேர்நற்கனிகள்
போதலருமுல்லைதிகழ்பூங்காவு-மீதுலவு
வண்டுமதுவுண்டுகளிமண்டியேகாந்தாரம்
பண்டைமறைவேதியரிற்பாடவே-மண்டுபுனல்
வாளைசேல்துள்ளிவளர்பூகந்தன்னிலுறு
பாளைகிளித்துமடற்பங்கயத்தி னீளுறக்கங்
கொள்ளுந்தடவாவிகொங்கவிழுங்காவிமலர்ப்
பள்ளநீர்தங்கும்பழனங்க-ளுள்ளனவாய்
பாங்கும்பெறுங்கும்பழாவளைவாய்வீற்றிருந்து
தீங்கற்றுவண்மைதிருமூர்த்தி-தாங்குபெருங்
கள்ளவேடத்தைக்கருத்திலெண்ணூதூண்மைமிகு
தெள்ளுமுணர்வுடையோர்சேர்ந்துதம-துள்ளத்தே
யன்புவைத்துக்கைகூப்பியானந்தநீர்சொரிந்து

முன்புநின்று தன்னேமுறைவணங்கி-யின்பசுக
வாழ்வையெமக்களிப்பாய்வானவனேபோற்றியென்று
தாழ்விலாதேத்தத்தகுபலனே-யாழ்வுபெறு
வாரியமுதமெனமற்றவர்க்குத்தந்தருளிக்
கூரிருளாம்பாவக்கொடுவினையை-வேரோடே
நீக்கித்தனக்கடிமையாக்கிவைக்குநீர்மையன்
தேக்குந்திருவருள்சேர்சிற்சோதி-வாக்குமனந்
தேகத்துக்கெட்டாததேவாதிதேவபிரான்
யோகத்தோர்காணுவுயர்நாதன்-வாகுபெறு
மத்தகயமுகத்தன்மாலோன்றிருமருகன்
நித்தியமென்சித்தமிசைநேசத்தை-வைத்துமே
வந்த பிணிகள்மனக்கவலைநீக்குகன
சுந்தரவொய்யாரதுரைராசன்-முந்தியநாள்
திங்கட்குடையுடையோன்றென்றலிளந்தேரோன்
செங்கண்மாலீன்றசிறுமதலை-யைங்கணைகள்
கோட்டிக்கருப்புவில்லைக்கொண்டெய்யநெற்றிக்கண்
காட்டிக்கனல்வீசிக்காய்ந்தவனை-வாட்டியே
தொந்தரவுசெய்ததொலையாவசுரருடன்
முந்துபுரஞ்சுட்டமுழுமுதல்வ-னிந்துபணி
கங்கைமணியணியுங்காளன்பங்கிலுறை
மங்கையுமைபெற்றமகனுனேன்-துங்கமுறு
மோர்கொம்பிருசெவியனூற்றெடுக்கும்மதத்தன்
ஓரார்நால்வாயன்றிகழ்கரங்கள்-பேராரு
மைந்துடையானேரம்பனாரணனுநாரணனும்
வந்துபணியுமலர்ப்பாத-னிந்திரன்றன்
னொல்லைவினையின்றொடர்நீங்கக்கும்பமுனி
மல்லற்கமண்டலத்தின்மாநீர்த்தஞ்-சொல்லார்
புகாரில்வரவிடுத்தேபூவுலகோர்தங்கண்
மகாரையனைகாத்தவாறே-தகாதவெமைக்
காக்குங்குணநற்கருணைபொழியுமுகில்
ஆக்கல்திதியழித்தலாதியா-மீக்குலவு
மெத்தொழிலும்வல்லானெழில்விக்கினேசுவரன்
பத்திரைக்குக்கேள்வன்பகாரிய-மெத்துமகஞ்
செய்தசிறுவிதிதன்றீவேள்வியையழித்தோற்
கையன்பரனையவமதித்த-செய்யமல
ராசனன்றனேர்சிரத்தையன்றுகிள்ளித்தேவருடை
நீசக்கெறுவடக்குநின்மலனு-மீசுவரன்
ஆதிவாரிரவற்குமன்றுவிண்ணோரைச்சிறைசெய்
நீதியிலாச்சூரைநெடுவேலான்-போதமரிற்

சித்ரவதை செய்தசிவசுப்ரமண்யதேவனுக்கும்
முத்தி முதற்றுணையாய் முன்பிறந்தோன்-நித்தியன்றன்
பங்கயத்தையொத்தபதத்தைப்பணியாமல்
மங்குலெனச்சிக்குமயிரதனைச்-செங்கனிக்கே
யூத்தைவாய்நேரெனவுமோடிநீர்பீழைசொரி
நேத்திரத்தைநீலோற்பலமெனவுங்-கோத்தநிரை
முத்தென்றுஞ்சொத்தை முறுவறனைச்சீசளிகண்
மெத்திச்சொரிமூக்கைமென்குமிழா யொத்தகுறும்
பீயுமழுக்குப் பிறக்கின்றநீள்செவியை
யாயவள்ளைநேரென்றறைந்துதினம்-நாயகராம்
பேரைமயக்கும்பெரும்பாவபீடமதா
நீருந்தசையுநிணமுமன்றிச்-சீரில்லாக்
கொங்கைதனைப்பங்கயத்தைக்கோங்கைநிகரெனவுந்
தங்குமரசினிலைசர்ப்பபடம்-மங்காத
தேர்த்தட்டெனவுஞ்சீய்நாறுமல்குறனை
மார்ச்சாலநோக்கத்தைமாசிங்கத்-தேர்ச்சிபெறு
நோக்கமெனச்சிந்தனைசெய் நுண்ணறிவில்லார்போலத்
தாக்கணங்கைநேராபித்தையலென-மாக்கடரு
மங்கையர்மேன்பொங்கிமயல்கொண்டபாவியெற்குப்
பங்கமன்றிவேறேபலனுண்டோ-புங்கவனே
கோகனகஞ்சூதந்தேன்கோட்டுமசோகுமுல்லை
வாகுபெறுநீலமலரைந்தும்-வேகமுறு
பாணமெனத்தொடுத்துப்பாவக்குழிவிழுத்து
நாணமிலாக்காமனுக்குநாரியர்கள்-வீணாகும்
கண்வலைக்குஞ்சிக்கிக்கவலைகொள்ளுமென்மனதைப்
பண்படுத்திவைத்தபராபரனே-நண்பாகப்
பெற்றபிள்ளைசெய்தபெரும்பிழையைத்தந்தையர்தாய்
குற்றமெனக்கொள்ளார்குறைகூறார்-கொற்றவனே
யன்னபடிநீயனுக்கிரகஞ்செய்தெனைநின்
நந்நிலையில்வைத்துநடாத்துவாய்-பன்னுகலை
கற்றகவிவாணரைப்போற்காரிகைநன்னூலறியாச்
சிற்றறிவைக்கொண்டசிறியேன்சொல்சொற்குற்றமுஞ்
செப்புபொருட்குற்றந்தீயவையும்நல்லவையாய்
ஒப்பமுடனேற்பாயுரவோனே-இப்புவியி
லுற்றகுலதெய்வமும்நீயுன்னையேநம்பினேன்
எற்றுநீர்ஞாலத்திருட்கடலி-னிற்றவரை
இக்கறியாமாலுமிபோற்றேம்பித்திரிந்துலைந்தேன்
தக்கபுகழ்சுகத்தைத்தந்தாள்வாய்-மிக்கவனே
எல்லாப்படியாலுமெண்ணரிஞளிவ்வுடம்பு

பொல்லாப்புழுமலிநோய்புன்குரம்பை-நல்லா
ரறிந்திருப்பாரதனிலுலாங்கமலநீர்போற்
பிறிந்திருப்பார்பேசார்பிறர்க்கெனவே-அறைந்திட்ட
மூதுரையைத்தேர்ந்திலேன்முன்னவனேமுக்கணா
வாதியந்தமில்லாவரும்பொருளே-சோதியே
அன்னையும்நீஅப்பனும்நீஆனதுணைசுற்றமும்நீ
பின்னையுளபொருளும்பேறுநீ-நன்முகமாய்
வாடாமகனேமனக்கவலைகொள்ளாதே
யேடாகூடத்தையிணிவிடுதி-கூடாத
கூட்டத்தைநீக்கிகுணமாயிருவெனவே
நாட்டமுடன்கிருபைநல்காயோ-கேட்டினைச்செய்
தானவரைக்கொற்றலைத்தமைக்கயாசுரனை
வானவர்க்காய்க்கொன்றுவரங்கொடுத்தே-தேனுலவு
கற்பகநாடாளக்கருதுமுகில்வாகனனைப்
பொற்புடனேவைத்தபுனிதனே-சொற்பரவு
கொன்றைமணிமுடியாய்கோவிந்தரட்சகனே
துன்றுவலவைதுவனைவனே-நன்றியிலாச்
சத்துருக்கள்மித்துருபோற்சார்ந்துநின்றேயென்றெனக்கு
மெத்தனையோசெய்யுமிடையூறுகளு-முத்தமனே
செய்துமின்னஞ்செய்யவந்தான்செய்விக்கவுங்கருதி
மெய்யாய்வழிதேடும்வீணரெயு-மையாவே
பூதபசாசுகளைப்புல்லரெமக்குவிடும்
வாதைதருபேய்பில்லிவஞ்சனையுஞ்-சேதிப்பாய்
சித்திவிநாயகனே தேவாதிதேவனே
சத்திகணபதியே தண்வீர-கத்தியெனுஞ்
செல்வசந்த்ரசேகரனே தீமையொன்றும்வாராம
லல்லல்வறுமையகற்றுவாய்-தொல்புவியில்
இப்பிறப்பிலல்லாமலெப்பிறப்பில்யான்வரினும்
அப்பிறப்பிலெல்லாமடியேனுன்-செப்புமலர்ப்
பாதமறவாதபத்தனாகும்படிசெய்
வேதங்களுக்கெட்டாவிண்ணவனே-ஆதிபரா
சித்தர்முனிவர்தெரிந்துரைசெய்யாயுள்வே
தத்தைமிகக்கற்றவறிவுடைம-ருத்துவரால்
தீராதகன்மநோய்தீர்க்கவல்லமாமருந்தே
சேராரைக்கண்டனஞ்செய்தீபமே-சீராக
வில்லறத்தில்யானிருந்தேயேற்றமுறைபிறழா
நல்லறத்தைச்செய்துநயப்புடனே-தொல்புவியில்
என்றேயத்தோடுமியம்புமெந்தநாடுநகர்
சென்றாலுஞ்சீர்சிறப்புச்செய்யவைத்தாய்-நன்றிதரு

சற்பாத்திரமக்கள்தங்குசுற்றமித்திரரோ
டற்புதமாய்வாழவைத்தவண்ணலே-சிற்பரம
வத்தனேமுத்திதருமாருயிரேபேரொளியே
மூத்தானமூடிகமூர்மூர்த்தியே-வித்தகனே
யெங்கள்குலதெய்வநீயல்லால்யாருண்டு
மங்காதகீர்த்திமகாதேவா-துங்கவனே
யெத்தனையோகுற்றங்கள்யான்செய்தேனிப்போது
கத்துகின்றபுன்சொல்லைக்கையேற்றே-யத்தனையு
நீக்கிப்பொறுப்பதுவுநின்கடமையல்லவோ
ஆக்கங்குலநலங்களானவெலாஞ்-சாக்காடு
மேவும்பொழுதிலுடன்வருமோசமேலோனே
கோவேயுன்கண்ணருளைக்கொண்டலால்-பாவிகளுக்
கேற்றதஞ்சம்வேறுண்டோவேகனேயோகபரா
கூற்றனையுமோட்டிவிடுங்கொற்றவனே-சீற்றமிகு
சீயங்கரடிநரிசெந்நாய்விடப்பாம்பு
பாயும்புலியாம்பலமிருக-மோயாது
சீவனஞ்செய்தீவனத்துச்சென்றனுமுன்றுணையே
ஆவதுவேறுருண்டனுசரிக்கத்-தாவதுசேர்த்
தத்துவமெஞ்ஞானசரமசரம்யாவினுக்கு
மத்துவிதக்கோவேயருள்.



உ

# கு ம் ப ழா வ ளை

# விநாயகர் சதகம்

## காப்பு

ஆக்கந்தழைக்குமறநெறிகாய்க்குமருள்பழுக்குந்,
தீக்குங்கொடும்பவச்செவ்வெயில்வெப்பஞ்சிதைந்தொழியப்,
போக்கும்பதநிழல்பொற்பவிரிக்கும்புலவருயிர்,
காக்குங்குறைக்கொம்பரொன்றுடனேங்குநங்கற்பகமே.

## நூல்

பூவருகஞ்சக்கிழவனுமர் லும்புராரியுமுன்
சேவடிதாழ்ந்தலைமையும்வேறுசெயலுமின்றி
யோவருந்துன்பமுழக்குமென்றூழ்வுமுணர்த்தியென்முன்
வாவருள்வாரிதியேகும்பழாவளைவாரணமே.

தத்தங்கருமமுடிவாலெவர்க்குந்தழைக்குமின்ப
நித்தந்தொழுமவர்க்குன்னருள்யாவையுநேர்வித்தலான்
மைத்தந்திமாமுகவாகும்பழாவளைவானவவென்
சித்தந்தெளியுமுனைப்போற்பிறிதிலைத்தெய்வங்களே.

எல்லாந்தரும்வள்ளனீயெவையேனுமிரந்துபெற
வல்லேன்றுணைமற்றிலேனிருண்டேறுமழைவறப்ப
நில்லாதழியும்பயிருமொத்தேனெனைநீபுரப்ப
தல்லாலெவர்புரப்பார்கும்பழாவளையைங்கரனே.

ஒருநாளுறவென்றுயிர்த்துணையென்றுமுறுவர்பின்னை
வருநாட்பகைவருமாவாரவரைமனநினையேன்
றிருநாட்கமலமலர்ச்சேவடிகடினந்தொழுவேன்
மருநாண்மலர்ப்பொழில்சூழ்கும்பழாவளைவானவனே

சாந்தந்தவநெறிதேருங்கருங்குழற்றையனல்லார்
சீந்துந்திருநெடுவேல்விழிசாய்ப்பத்தினமழிவேம்
பூந்தண்பொழிற்கும்பழாவளைமுக்கட்புனிதர்பொற்று
ணீந்தும்புணையெமக்காமேபிறவிநெடுங்கடற்கே.

தேகங்கழித்தெனதாருயிர்போமன்றுசேருமுளச்
சோகங்கழித்தெனுயிர்த்துணையாயுனைத்தோத்திரஞ்செ
யூகந்திருவடிப்பத்திமையாவுமுதவுகண்டாய்
நாகங்கிழிக்கும்பொழிற்குப் பழாவளைநாயகனே.

கடிநாறுகூந்தன்மலையான்மடமகள்கைவருட
மடிநாறுமுக்கண்ணர்தோண்மலைநாறுமவ்வானவர்த
முடிநாறுமெய்யடியாருளநாறுமுரிதிரைநீர்ப்
படிநாறுசீர்க்கும்பழாவளைநாதன்பதமலரே.

அரிபிரமாதியமரரடியரடிகட்கியான்
புரியுமடிமையென்றுமெனக்குன்னடிபோற்றலன்றித்
தெரியுந்துணைமற்றிலேன்மற்றெனக்குச்சிறிதிரங்காய்
வரிவளிபாடும்பொழிற்கும்பழாவளைவாரணமே.

தடமாமதிற்கும்பழாவளைத்தந்திசரணந்தொழுந்
திடமாமனப்பத்திமையுடையார்க்குத்திருவிசும்பும்
படமாரரவணைப்பள்ளியும்பங்கையப்பைந்தவிசும்
விடமாமெனமனங்கைப்புறக்கண்டுவெறுப்பனவே.

முடியாக்கவலையுட்பட்டடியேன்மனமூழ்கிடினும்
விடியாநரசம்புகினுமறியாவிலங்கெனவே
படிமேற்புகினுமுன்ருட்பத்திவேண்டும்பலபகலு
மடியாப்புகழ்க்கும்பழாவளைவாழ்மதவாரணமே.

உ

கணபதிதுணை

அளவைக் கும்பழாவளை

# விநாயகரூஞ்சல்

## காப்பு

பூமருவு பொன்னகரம் பொருவு மென்றுப்
புலவர்புக ழளவைநகர் புரக்கு மண்ணல்
தேமருவு மலரிதழித் தொடையல் வேய்ந்த
செஞ்சடையைங் கரப்பெருமான் சீரூஞ்சற்கு
நாமருவு சொற்சிறப்பும் பொருளின் வாய்ப்பும்
நலம்பலவுந்தந்துதவு நால்வாய் முக்கட்
டுமருவு தும்பிமுக நம்பி யும்பர்
தொழுதுதின முருகுபதத் துணைகடாமே.

## நூல்

மறைநான்கு மொருநான்கு வடங்களாக
வாய்ந்தசிலா கமம்பலகை மாண்புதோற்ற
வறைநான்கு மறைக்குமுத லாகிநின்ற
வக்கரமே விதானமென வமைந்து காட்ட
நிறைநான்கு மறையொடுமா கமம்வெவ்வேறு
நிகழ்த்துபொருளனைத்துமொரு நெறிப்பட்டாங்கு
முறைநான்கு புயமுதல்வ ராடீரூஞ்சல்
முத்தமிழ்க்கும்பழாவளை யீராடீரூஞ்சல்.

பத்திநெறி யெனப்படுமவ் விட்டந் தொட்டுப்
பரவியநாற் கரணவடம் பயிலப் பூட்டி
நித்தியசித் துயிர்ப்பலகை நேரக் கோத்து
நெடிதியற்று தவம்பலவு நின்று நூக்க
வத்தகைய சத்துவவெண் முத்தந் தூக்கி
யமைக்குமணி யூகல்விளையாட்டு கந்தீர்
மத்தமத மாமுகத்திராடீ ரூஞ்சல்
வளர்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்.

எங்குநீர் கலந்திருப்பீ ரென்று மென்று
மெவ்வுயிர்க்கு முயிராகி யிருப்பீ ரென்றுஞ்
சங்கையற மறையுரைக்குஞ் சாத வாக்குத்
தலைவர்நீர் கண்டறிதருன்வேண் டாவோ
மங்குல்புவி யுலகுயிர்க ளனைத்து மொவ்வோர்
மாத்திரையுட் காட்டுமணி யூஞ்சலேறி
நங்கள்மனக் குறைதவிர்ப்பீ ராடீரூஞ்சல்
நளிமதிற்கும்பழாவளையீ ராடீரூஞ்சல்.

அம்பரமா நாட்டகத்து நாகநாட்டு
மகனிலத்துஞ் சென்றூட வாக்கை யென்னும்
பம்பாத்து ளிருத்திநமைப் பல்கா லாட்டும்
பாங்குடையீர்மணியூசல் பயில வேற்றி
யும்பர்பதி முதற்பதிதொ ளூழியா தாட
வும்மையுமாட்டுவதுநமக் குரிமை யன்றோ
நம்பரமசிவகுமர ராடீரூஞ்சல்
நறும்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்.

இரவுபகல் நுமைவழுத்து மெம்பொ ருட்டா
லிங்ஙனநீர் நெடிதிருந்தா லிருவி சும்போ
ரரவநக ருறையுமவ ரழுங்கு ரோரோ
வவர் புரிபூசனைநோக்கு மதுவேண்டாவோ
விரவுமணி யூசலிது விண்ணுமண்ணும்
மேதகுபா தலமுமிகுவிரைவி னேடும்
பரவுமவர் பவந்துடைப்பீ ராடீரூஞ்சல்
பைம்பொழிற்கும் பழாவளையீ ராடீரூஞ்சல்.

திருமருப்போ டொன்றியநின் செய்யமேனி
சீரூஞ்ச லாடுறுமத் திசைக டோறு
முருவளையுஞ் சிறுபிறையோ டொன்றுஞ் செக்க
ரொவ்வொருகா லுறுவதிறும் பூதென் றுள்ளி
யிருநிலமுந் திருவிசும்புமெலவையு நோக்க
வெழுங்குயிலா லரமகளி ரிருஞ்சூ ரீன்ற
திருமதலை யமர்நினைவிற் றிருகவிண்போய்ச்
செறிபொழிற்கும் பழாவளையி ராடீருஞ்சல்.

சிறுபிறைவெண் கங்கைவிழச் செறிந்த நாகஞ்
சீறியெழச் சடைக்கற்றை சென்னி யாடக்
குறுநகையி னெழுநிலவு கொண்டர் நாட்டக்
குவளைமலர் முகிழ்விரிப்பக் குறுகியாட
நறுமலர்ப்பொற் றொடையாட நாற்புயத்து
நான்றமுறச் செவியாட நள்ளா ருட்கச்
சிறுகரத்தி னேந்துதிருத் தந்தமாடத்
திருவிழைகும் பழாவளையீ ராடீருஞ்சல்.

விரிமுகமா நிலம்புரக்கும் வேந்தர் கோமான்
விறல்வளவன் மடப்பாவை வேண்டுகோளாற்
பரிமுகம்போக் குறுமாட்சி படைத்துக் கொண்டீர்
பனிமதிக்கும் பலர்க்குநகை படிவ தோர்ந்துங்
கிரிமுகங்காட் டியபுயலிற் கெழுமுந் தோற்றக்
கீசகவெண் முளைபொருவக்கிளர்ந்த கோட்டுக்
கரிமுகம்போக் குறவறியீ ராடீ ருஞ்சல்
காவளைகும் பழாவளையீ ராடீருஞ்சல்.

மலைமகளு மரனுமொரு வடந்தொட் டாட்ட
மலர்மகளு மாலுமொரு வடந்தொட்டாட்டக்
கலைமகளு மயனுமொரு வடந்தொட்டாட்டக்
காமருநும் மடியரொரு வடந்தொட் டாட்டக்
குலைமருவு தெங்கமர ரமுதவூணிற்
குவலநீர்ச் சுவைமிகுதி கொண்டு காட்டு
நிலைமருவு காவெடுத்தோர் நேரவிண்போய்
நீள்பொழிற்கும் பழாவளையீ ராடீருஞ்சல்.

அரம்பொருமங் குசப்படையி ராடிரூஞ்சல்
அடியேமை யினிப்படையீ ராடீரூஞ்சல்
விரும்பியதொண் டருக்கினியீ ராடீரூஞ்சல்
விரவலர்நெஞ் சுக்கினியீ ராடீரூஞ்சல்
சிரம்படுவெண் கங்கையினி ராடீரூஞ்சல்
திருமுகத்தி னகங்கையின ராடீரூஞ்சல்
நிரம்புபவப் பிணிவலியீ ராடீரூஞ்சல்
நீள்பொழிற்கும் பழாவலியீ ராடீரூஞ்சல்.

## வாழி

வான்மலிமா மழைவாழி மநுநூல் வாழி
மன்னவர்செங் கோல் வாழி வையம் வாழி
நான்மறையா கமவொழுக்க ஞானம் வாழி
நாகரூர் பொருமளவை நகரி வாழி
கூன்மலிவெண் பிறைச்சடையெங் கோமான் சைவக்
குலம்வாழி நலந்தருமான் கூட்டம் வாழி
தேன்மலிபூம் பொழிற்கும்பழாவலிப் பேர்த்
திருப்பதிவாழ் சிவக்களிற்றின் திருத்தாள் வாழி.



உ

சிவமயம்

# ஸ்ரீ கும்பழாவளை விநாயகர் போற்றித் திருப்பதிகம்

மலைதங்கு பசுபதியும் வரதபர மேஸ்வரியும்
மகிழவரு திருமைந்தனே
நிலைதங்கு பாசமுடனங்குசம் கொண்டருளும்
நீண்ட தும்பிக்கையனே
அலைதங்கு வாழ்விலே நலமெய்த நினதுதிரு
வடிபேணு மன்புதருவாய்
கலைதங்கு பதியளவைக் கும்பழாவளை திகழ்
கணேசனே போற்றி போற்றி

பேர்பொலியும் வேதமுட னாகமவளந்தரும்
பிரணவா போற்றி அடியார்
சீர்பொலியும் நெஞ்சிலுறை சிலனே போற்றிநம்
செல்வனே போற்றி நினது
தார்பொலியும் மெய்ஞ்ஞான சரணகம லாலயத்
தவப்பணி இயற்ற வருள்வாய்
கார்பொலியும் தண்ணளவைக் கும்பழாவளை திகழ்
கணேசனே போற்றி போற்றி.

மதிபூத்த செஞ்சடையன் வருதே ரிறுத்தவா
வரதனே விக்கினேசா
துதிபூத்த குறுமுனி துரத்துமோர் சிறுவனெனத்
தோன்றுமைங் கரநாதனே
விதிபூத்த எங்கள்வினைத் தளைநீக்க நின்பதும
விரைபூத்த கருணைபுரிவாய்
கதிபூத்த பொன்னளவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.

காவேரி தந்துசேர் காழியூர் காத்தவா
கணபதீச் சுரந்தந்தவா
பாவேறு மௌவையின் பண்டமிழ் சுவைத்தவா
பழம்வாங்க வலம்வந்தவா
சாவேறு பலகோடி செனனதொகைக் களைதீர்க்கும்
தனிமுதல்வன் நீயல்லவோ
காவேறு வளவளவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.

தருணமழை யேஎங்கள் தவவடிவ மேவேத
தத்துவச் சிவமாகிய
அருணனெழு சிகரமே ஆறங்க வாழியே
ஆகம பரந்தநதியே
மருணெறி கிடக்குமெம் திருள்வலை யறுத்துனது
மலரடி கிடக்க அருள்வாய்
கருணைமிகு கவினளவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.

ஒவியந் தருகின்ற ஓங்கார வட்டத்துள்
ஒளி யொலிவிளங்கு கலையே
நாவிளங் கும்சர்வ ஞானவட் சரகோண
நாதனாய் நின்ற பொருளே
பாவிளங் கும்செல்வ பாதபங் கயமலரைப்
பற்றுதவம் முற்றிவருமோ
காவியம் புகழளவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.

தமிழ்மலரும் திருமுறைகள் தலைகாட்ட வழிகாட்டும்
சார்நாரை யூரப்பனே
குமிழ்முலைக் குறமாது குமரனை மணம்புரியக்
கூவிவரு மொருபானையே

உமிழ்கனற் சினவிழிக் காலனெனை யணுகாமல்
உற்றதுணையாக வருவாய்
கமழ்பழப் பொழிலளவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.

சந்ததிச் செல்வமும் சால்புநிறை கல்வியும்
சௌபாக்ய மனை வாழ்க்கையும்
சுந்தரத் தேகமும் சுகமான யோகமும்
தூயசிவ நெறிஞானமும்
வந்தபட் டம்பதவி விருதுகளு முளதுவிழி
மலராது கைகூடுமோ
கந்தமிகு மிளிரளவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.

திடமுடைய வாழ்வுநீ சிவலோக மூர்த்திநீ
சிந்தனை நயந்தகனிநீ
உடைமைநீ உறவுநீ உவந்துபெற் றவரும்நீ
உணர்வாகி நின்ற உயிர்நீ
மடமைக ளொழிப்பவன் நீயேயென் றுனைநம்பி
வாழ்கிறேன் எமை வளர்க்கும்
கடவுளே அளவையூர்க் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.


சிற்பரா னந்தனே திருநடன பாதனே
தேடுசகஸ் ராரவெளியின்
தற்பரா சாயுச்ச சமரச சுயாதீன
சங்கர மகாதேவனே
அற்புதா வல்லபைக் குரியமண வாளனே
அடியேமை வந்து காப்பாய்
கற்பகா அளவையூர்க் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி.

சிவமயம்

# ஸ்ரீ கும்பழாவளைப் பிள்ளையார்

## தோத்திரம்

ஒப்பரிய வானமுயர் ஓங்கார கோபுரமும்
ஒலிமலியு மணிநாதமும்
ஓதுபுகழ் சோலைகுயில் கோலமயில் மேவுமதி
லுற்றபொற் கோயில் கொண்ட
செப்பரிய கருணைமிளிர் சித்திக் கணேசனே
சிவசத்தி தழுவு மகனே
சீரான பிரணவப் பேரான வடிவனே
சிந்தனை கனிந்த கனியே
இப்பிறவி யன்றிவரு மெப்பிறவி வரினுமே
என்னுயிர்க் குயிர்மூலமே
ஏரம்பனே எழுது மோர்கொம்பனே தொண்டர்
இதயத்திருக்கு மரசே
அப்பனே நின்னடியை அடியே னினைந்துதினம்
அன்பூறு மின்ப மருள்வாய்
அளவையூர்க் கும்பழா வளைமேவு மையனே
அருள்விக்கி னேசுவரனே.



உ

சிவமயம்

கும்பழாவளை

# ஸ்ரீ சுப்பிரமணியர் திருஊஞ்சல்

சீர்மருவு மீழவள நாட்டு நங்கை
சேர்வதனமென உயர்யாழ்ப்பாணமேய
ஏர்மருவு திலகமெனும் அளவைமன்னும்
எழில்நிறை கும்பழாவளை நற்பதியில் வாழும்
கார்மருவு கரிமுகத் துணைவன் ஆசிகருணை தர
எழுந்தருளும் ஆறுமுகர்க்கு
பேர்மருவு மூஞ்சல் இசைபாடியேத்த
பெருமைசெறி கணபதி பொற்பாதம் காப்பாமே

கந்தவரை தணிகை இருதூண்களாக
கதிர்விடுபொற்பரம் குன்று விட்டமாக
சந்தமுறு நான்மறை நான்வடங்களாக
சார்ந்துவரும் ஆகமநூல் விதானமாக
முந்து சடாட்சரப் பலகை ஏறிஎங்கள்
முன்னுறு கும்பழாவளையில் எழுந்தருளி
அந்தம் முதல் அறிவரியீர் ஆடீரூஞ்சல்
அம்மையர்கள் இருவரொடும் ஆடீரூஞ்சல்

அரவணைசேர் அரிஒருபால் வடந்தொட்டாட்ட
அரவணைசேர் அயன்ஒருபால் வடந்தொட்டாட்ட
தருவணையும் அமரரிறை போற்றியேத்த
தவமுனிவர் குழாம் ஆசிதந்துநிற்ப
கருவணையில் எமையாட்டி கருணை தந்து
காவளர் கும்பழாவளையில் எழுந்தருள்வீர்
சரவணைசேர் தருகுமரா ஆடீரூஞ்சல்
தனிமுதல்வ சத்திய ரோடாடீரூஞ்சல்

பிரமமுறு தருக்குரிய பிரணவத்தின் பேணுகின்ற
பொருள்கேட்ட போதிலேங்க
குருமுதலாய் அறியர விலங்குபூட்டி
கூடுசிறையிட எந்தை பணித்தவேளை
தருமமுறை அயன் சிறைவிட்டாண்ட மூர்த்தி
தகுகும்பழாவளையில் எழுந்தருள்வீர்
அருமறையும் அறிவரியீர் ஆடீரூஞ்சல்
அரிவையர்கள் இருவரொடும் ஆடீரூஞ்சல்

---

சக்தியராய் மகிழ்ந்தமரும் இருவர் தங்கள்
தகமைசெறீ இலக்குமிபால் ஸ்கந்தசஷ்டி
மித்திய நல்விரதமனுட்டிக்க ஈந்து
மெல்லியர் தம்நோன்பும் உறுதவமும் கண்டு
பத்தியுடன் இந்திரன் வேல்நம்பிசய
பகர்கும்பழாவளையில் எழுந்தருள்வீர்
சித்தியுற ஏற்றருள் வீராடீரூஞ்சல
சிவகுமர சத்திய ரோடாடீரூஞ்சல்

இந்திரனுக் கரசளித்தீர் ஆடீரூஞ்சல்
இமயவர்தம் பதமளித்தீர் ஆடீரூஞ்சல்
பந்தமயல் சூரறுத்தீர் ஆடீரூஞ்சல்
புகுமடியார் பவமறுத்தீர் ஆடீரூஞ்சல்
தந்திமுகர்க் குறுதுணையாய் வினைகள்தீர்த்து
தகுகும்பழாவளையில் அமர்ந்தெஞ்ஞான்றும்
அந்திவண்ணன் தரும் புதல்வா ஆடீரூஞ்சல்
ஆயிளையார் இருவரொடும் ஆடீரூஞ்சல்

தானவர்கோன் வரமழித்தீர் ஆடீரூஞ்சல்
தகுமவர்க்கு வரமளித்தீர் ஆடீரூஞ்சல்
வானவசேனைத் தலைவா ஆடீரூஞ்சல்
வருஞான சத்திதர ஆடீரூஞ்சல்
ஏனல்வளர் புனத்துறைவீர் ஆடீரூஞ்சல்
எழில்மிகு கும்பழாவளையில் அமர்ந்தெஞ்ஞான்றும்
தானவர் மாமகள் கணவா ஆடீரூஞ்சல்
கைம்மலை மெல்லணங்கிறைவா ஆடீரூஞ்சல்

வேதசிவாகமமும் செந்தமிழும் வாழி
வேதியரும் வேந்தன் செங்கோலும் வாழி
காதணி வெண்குழையுடையான் அடியார் வாழி
கார்வாழி ஏர்வாழி வையம் வாழி
மாதர்தரு கற்பினொடு ஆன்கூட்டம் வாழி
வள்ளி தெய்வயானை மணவாளன் வாழி
போகவளம் செறிஅளவை நகரம் வாழி
புகர்கும்பழாவளை ஐங்கரன் தாள்கள் வாழி

---

புகைப்படங்கள் அன்பளிப்பு:

கிருபா போட்டோ
அன்
றெக்கோடிங் சென்ரர்
காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்

— அச்சுப்பதிப்பு —

ஸ்ரீமகள் பதிப்பகம்
பிரதான வீதி - அளவெட்டி